ஈழநாடு
Eelanadu
ஈழநாடு




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 04.04.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 125 | பக்கங்கள் : 16



06
பங்காளிகளை அவசரமாக சந்திக்கிறார் கோட்டாபய!



07
நாடு முழுவதும் உச்ச பாதுகாப்பு



09
ஆசிய நாடுகளின் நிலைப்பாடு இலங்கையை பாதுகாக்குமா?



14
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த பல உண்மைகளை மறைக்க முயற்சி

# இனவழிப்பு நடைபெற்றது என்பதற்கு போதியளவு சாட்சியங்கள் இல்லை!

**சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு**



மட்டக்களப்பு, ஏப். 04

இலங்கையில் இனவழிப்பு நடைபெற்றது என்று கூறினாலும் நீதிமன்றப் பொறிமுறைக்குள் நிருபிப்பதற்கான சாட்சியங்கள் இருந்தால் தான் அதனை நாங்கள் கோரவேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எனவே, சாட்சியங்கள் போதாமல் இருக்கின்ற போது, எமது எதிர்பார்ப்புக்கு விரும்பத்தகாத பதிலே வந்துசேரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

15



# பொதுஜன முன்னணி உடைகிறதா?

**தனியாக மே தினத்தை நடத்துவதற்கு அரச ஆதரவுப் பங்காளிகள் திட்டம்**

கொழும்பு, ஏப்ரல் 04

அரசின் 11 பங்காளிக் காட்சிகள் ஒன்றிணைத்து தனித்து மே தின நிகழ்வை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளனர். கொழும்பில் நடைபெற்ற குறித்த 11 கட்சித் தலைவர்களின் சிறப்புக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுஜன முன்னணிக்குள் பிளவு கடுமையாக வலுத்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

15

## யாழ்ப்பாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா

**அவர்களில் ஐவர் பரமேஸ்வரா சந்தி கடைத் தொகுதியில் அடையாளம்**

யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாணத்தில் மேலும் 7 பேருக்கும் கொரோனா தொற்று உள்ளமை நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள்

15

## கொரோனா தொற்றால் நேற்று 8 மரணங்கள்!

கொழும்பு,ஏப்.04

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 579 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மாத்திரம் 8 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

15

## தேசத் துரோகிகளை அடையாளம் காட்டியுள்ளது ஜெனிவா தீர்மானம்

**செஹான் சேமசிங்க சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஏப். 04

"இலங்கை மீதான ஐ.நா.தீர்மான வாக்கெடுப்பு முடிவுகள் தாய் நாட்டை உண்மையாக நேசிப்பவர்களையும், பணம் மற்றும் அதிகாரத் துக்காகத் தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கத் தயாராக உள்ளவர்களையும் தெளிவாக அடையாளம் காட்டியுள்ளது."

-இவ்வாறு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம்

15

## தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறிமுறையை முன்னெடுப்பது கட்டாயம்!

**அரசிடம் அநுரகுமார வலியுறுத்து**



கொழும்பு, ஏப். 04

"இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களைக் கண்டறியவும், காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலும் ஆராய்ந்து தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையை இலங்கை

15

## சாணக்கியனும் சுமந்திரனும் துரோகம் இழைத்துள்ளனர்

**குற்றம் சாட்டுகிறார் கஜேந்திரன் எம்.பி.**

அம்பாறை, ஏப். 04

சாணக்கியனும் சுமந்திரனும் தமிழ் மக்களுக்கு துரோக செயலை செய்துள்ளதுடன் அந்த துரோகத்தை மறைக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளனர் என்பதை மக்கள் தெளிவாக புரிந்து

15

## யாழ்.மேல்நீதிமன்றில் பணியாற்றும் பட்டதாரிப் பயிலுநருக்கு கொரோனா

யாழ்ப்பாணம்,ஏப்.04

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பணியாற்றும் பட்டதாரிப் பயிலுநர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

பாசையூரைச் சேர்ந்த அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

15

## மாகாண தேர்தலை ஒத்திவைக்க ஒத்தாசை புரிந்தது கூட்டமைப்பு!

**அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு**

கொழும்பு, ஏப். 04

கடந்த நல்லாட்சி காலத்தில் மாகாணசபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒத்தாசையாக இருந்தது என கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவழிப்பு...

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியில் நேற்று நடைபெற்ற சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பான கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

“நாங்கள் சர்வதேசத்திடமே இன்று நீதிகோரி நிற்கிறோம். சர்வதேசத்தின் அறிக்கைகளை நாங்கள் சாதகமாகவே பாவிக்கிறோம். இந்த அறிக்கைகளுக்கு எதிராக யாரும் கருத்துகளைத் தெரிவித்ததாக நான் அறியவில்லை. இரு தரப்பினரும் போர்க்குற்றம் செய்தார்கள் என்று நிபுணர்கள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இனவழிப்பு என்பதை நீதிமன்றப் பொறிமுறைக்குள் நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் போதாது என்றும் நிபுணர்கள் கூறியுள்ளார்கள்.

இதேவேளை, நாங்கள் சொல்வதையே அங்கிருந்து சொல்ல வேண்டும் என்பதை யாரும் சர்வதேசத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது. அனைத்துப் பக்கங்களையும் விசாரணைசெய்து சரியான தீர்மானங்களையே அவர்கள் எடுப்பார்கள்.

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றியது இனவழிப்புத் தீர்மானம் என்று நாங்கள் கூறினாலும் அதன் இறுதியில் “கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு“ என்று சொல்லப்பட்டுள்ளது.

அவ்வாறானதொரு சர்வதேச குற்றம் இல்லை. “கட்டமைக்கப்பட்ட இன வழிப்பு“ என்பது இன்னும் சர்வதேச குற்றங்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றுதான் அந்தத் தீர்மானம் முடிவுறுகின்றது. இதனையே நாம் இனவழிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம் என தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடி வருகின்றோம்.

எனினும், விக்னேஸ்வரன் ஐயா வடமாகாண சபையில் நிறைவேற்றியதை வைத்து இனிவரும் காலங்களில் சர்வதேச குற்றங்களில் இதனைச் சேர்த்துக் கொள்வார்களோ தெரியாது.

தமிழ் மக்களுக்கு நாங்கள் பாரிய எதிர்பார்ப்பினைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அவ்வாறு வழங்கி அவர்களுக்குக் கிடைக்காததன் காரணமாகவே விரக்தி நிலையில் உள்ளனர்.

நாங்கள் உண்மை நிலையினைச் சொன்னால் இவர் அரசாங்கத்திற்காகப் பேசுகின்றார் என்பார்கள். நாங்கள் அரசாங்கத்திற்காக பேசவில்லை. உண்மையைச் சொல்வது ஒருபோதும் துரோகச் செயல்இல்லை.

இதேவேளை, ஐ.நா.வில். கொண்டுவரப்பட்டது இலங்கைக்கு எதிரான தீர்மானம் இல்லை. இலங்கை சரியான வழியில் பயணிக்க வேண்டுமாக இருந்தால் இலங்கையில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதுவே, இலங்கைக்கு நல்லதாகும். இலங்கை ஆட்சியாளர்களுக்கே தீர்மானம் எதிரானது.

அத்துடன், மனித உரிமை பேரவையினால் இலங்கையினை குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்ல முடியாது. அதற்கான அதிகாரம் மனித உரிமைப் பேரவைக்கு இல்லை.

நாங்கள் போராட்டங்களை நடத்தி, சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்தி, உண்ணாவிரதப் போராட்டத்தில் பத்துப் பேர் உயிரிழந்திருந்தாலும்கூட மனித உரிமைப் பேரவையினால் அதனைச் செய்யமுடியாது. பாதுகாப்புச் சபைக்கு மட்டுமே குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டுசெல்வதற்கான அதிகாரம் உள்ளது.

இதேவேளை, நாங்கள் பாரப்படுத்தலுக்கான பொறுப்புக்கூறலுக்கு ஏதுவான காரணியை மனித உரிமைப் பேரவைக்கு வெளியில் கொண்டு செல்லுங்கள் என்று கோரியிருந்தோம். இப்போது நாங்கள் கேட்டதற்கு அமைவாக அது வெளியே விடப்பட்டுள்ளது.

அத்துடன், முன்னைய 30 ஒன்று, 34 ஒன்று, 40 ஒன்று தீர்மானங்களில் கலப்பு நீதிமன்ற முறை சொல்லப்பட்டிருந்தது. இந்தத் தடவை அது சொல்லப்படவில்லை. ஒரு முழுமையான நீதிமன்றப் பொறிமுறையின் கீழ் பொறுப்புக்கூறல் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது-என்றார்.

## கொரோனா...

இதன்படி நேற்று மாலை 4 மரணங்கள் பதிவாகியுள்ளன என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 93 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்றுச் சனிக்கிழமை இரவு 7.30 மணி வரை 98 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதற்கமைய மொத்த கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை 93 ஆயிரத்து 226 ஆக உயர்வடைந்துள்ளது.

இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 90 ஆயிரத்து 21 பேர் குணமடைந்துள்ளதோடு, 2630 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் 4 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, நேற்று மாலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிவிப்புபடி மேலும் 4 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:

அக்குறணை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணொருவரும், ரம்புக்கணை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய ஆணொருவரும், கொழும்பு 10 பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய ஆணொருவரும் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய பெண்ணொருவரும் இவ்வாறு உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## தமிழர்களுக்கு...

அரசு முன்னெடுத்தே ஆகவேண்டும்.”

-இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விவகாரத்தை சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தும் செயற்பாடாகக் கருதாது எமது பிரஜைகள் மீதான அக்கறையில் உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறையை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டவுடன் 2009ஆம் ஆண்டில் மக்கள் விடுதலை முன்னணி 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அதில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் குறித்து பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தது.

அத்தோடு போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளதா?, காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது? போன்ற உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தோம்.

நாட்டின் நீதிமன்ற சுயாதீனம் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும், பொது ஆணைக்குழுக்கள் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் எனவும், சர்வாதிகாரப் போக்கைக் கைவிட்டு சகல மக்களுக்குமான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் நீண்டகாலமாக நாம் கோரி வருகின்றோம்.

தற்சமயம் நிறைவேற்றப்பட்டுள்ள ஜெனிவாத் தீர்மானத்தால் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என நம்ப முடியாது. அதேபோல் பொருளாதாரத் தடைகள் ஏற்படும் எனவும் கூறிவிட முடியாது.

ஒரு சிலர் அல்லது அரசு செய்த தவறுகளுக்கு ஒட்டுமொத்த நாட்டு மக்களும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமா? என்ற கேள்வியும் எங்கள் மத்தியில் உள்ளது - என்றார்.

## யாழ். மேல்...

யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள நீதிமன்றங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் பெறப்பட்ட மாதிரிகள் முல்லேரியாவுக்கு அனுப்பப்பட்டன.

இவற்றின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று மாலை கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்துடன், யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சிலரது மாதிரிகள் முடிவை எடுக்க முடியாத நிலையில் உள்ளதால் அவர்களது மாதிரிகளை மீளப்பெற்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-எ)

## சாணக்கியனும்...

கொள்ளவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவின் எடுபிடிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வைத்து மைத்திரியை வெல்ல வைத்தார்கள்.இதனால் ரணில்-மைத்திரி நல்லாட்சி வந்தது. இது அவர்களுக்கு வேண்டப்பட்ட ஆட்சி. இந்த அரசின் 5 ஆண்டு காலப்பகுதியில் எவ்வித உள்ளக விசாரணையும் நடத்தப்படவில்லை. சுமந்திரன் எம்.பி தற்போது கூறுகின்றார் உள்ளக விசாரணைதான் வேண்டும் என்று.

ஆனால் 2015 ஆண்டு ராஜபக்ஷவை தேர்தலில் வீழ்த்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வோம் எனக் கூறினார்கள். இதனை நம்பி சகல மக்களும் விழுந்தடித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றித்திற்கு அவரை(ராஜபக்ஷ) கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக மைத்திரிக்கு வாக்களித்தார்கள்.

சுமந்திரன் 2015 தொடக்கம் 2019 வரை ஜெனிவாவில் இலங்கையை எந்த அளவில் மீட்டு கொண்டு வந்தார் என கேட்கின்றேன். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கையை கொண்டு செல்லும் வாய்ப்பு சுமந்திரன்-சாணக்கியன்-சம்பந்தன் ஆகியோரினால் வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டமைப்பினால் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன், பிள்ளையான், வியாளேந்திரன், திலீபன் போன்றோர் பேரினவாத கட்சியின் முகவர்கள்.

இதில் பிள்ளையான், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டியவர்களாவர்.

அவர்கள் அரசாங்கத்தோடு இருப்பவர்கள். ஏனைய 13 பேரில் அறுதிப்பெரும்பான்மையுடன் உள்ள கூட்டமைப்பினர் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் 46/1 தீர்மானத்தை நிறைவேற்றுங்கள் என கூறியதன் மூலம் அது உள்ளக விசாரணையை வலியுறுத்தி இருக்கின்றது.

உள்ளக விசாரணையை வரவேற்பதாக இவர்கள் கேட்டுக்கொண்டதனால் தான் இந்த தீர்மானம் நிறைவேறி இருக்கின்றது. இதனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்லும் வாய்ப்பு இவர்களின் செயற்பாட்டினால் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த துரோக செயலுக்கு சாணக்கியனும் சுமந்திரனும் கூட்டாக மிகத் தீவிரமாக செயல்பட்டது மட்டுமல்லாமல் அவர்கள் அந்த துரோகத்தை மறைக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளனர் என்பதை மக்கள் மத்தியில் நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்-என்றார்.

## மாகாண...

காட்டியுள்ளார். மக்கள் முன் செல்வதற்கு பயந்து அப்போதைய அரசும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தேர்தலை ஒத்திவைத் ததாக அவர் கூறினார்.

மாகாண சபை தேர்தல் ஒத்திவைக்கப்படுமா என்று ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு, நிச்சயமாக தேர்தலை நடத்துவோம் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

ஆனால் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி தேர்தலை நடத்த ஒரு சட்டம் இயற்றப்படவேண்டும் என்றும் அவர் கூறினார். தற்போதுள்ள தேர்தல் முறையை ஒழிப்பதன் மூலம் தேர்தலை நடத்துவது தொடர்பாக முன்னாள் அரசாங்கம் பல கூற்றுக்களை முன்வைத்தது, அதற்கான மாற்றீட்டை அறிமுகப்படுத்தவில்லை.

முந்தைய அரசாங்கத்தின் ஆட்சியில் வரலாற்றில் முதல் முறையாக, பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவை முன்வைத்த ஒரு அமைச்சர் அதற்கு எதிராக வாக்களித்தார்.

மக்கள் முன் செல்ல அவர்கள் பயந்ததால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உதவியுடன் தேர்தல்களை நடத்துவதைத் தவிர்ப்பதற்காக முன்னாள் அரசாங்கம் பல்வேறு அரசியல் தந்திரங்களை பயன்படுத்தியது என்று அமைச்சர் பீரிஸ் கூறினார்.

## தேசத் துரோகி...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவா விவகாரத்தில் தாய் நாட்டின் நலனுக்கு முன்னுரிமை வழங்கிய குழுவினரையும், பணம் மற்றும் அதிகாரத்துக்காக நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்லத் தயாராகவுள்ள குழுவினரையும் நாம் அடையாளம் கண்டுகொண்டோம்.

ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பதற்குரிய சாத்தியங்கள் இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையைப் பயன்படுத்தி சில பிரிவினர் இலங்கையை இழிவுபடுத்த முயற்சிக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் எதிர்க்கட்சிகள் நாட்டை இழிவு படுத்தும் முயற்சிகளில் கைகோர்த் துள்ளன - என்றார்.

## பொதுஜன...

இந்த விசேட கட்டத்தில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் கலந்துகொண்டதுடன் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான அதாவுல்லா, டியூ குணசேகர, அசங்க நவரத்ன, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டிரான் அலஸ், அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் பிற கட்சித்தலைவர்களும் பங்குகொண்டிருந்தனர்.

இந்த மாற்றுக்குழுவின் மே தினக் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கலந்துகொள்வது முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. எதிர்வரும் மே முதலாம் திகதி சிறி லங்கா பொதுஜன பெரமுன அதன் மேதி னக் கூட்டத்தை நடத்தவுள்ள நிலையில் இந்த முடிவை ஏனைய 11 கட்சிகளும் எடுத்துள்ளன.

ஆனால் என்ன காரணத்துக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் தொடர்ந்துவரும் காலங்களில் இந்த நிலைப்பாடு மாறுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. தனித்து மே தினத்தை நடத்தப்போவதாக அறிவித்திருக்கும் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு ஒரே மே தினம் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்களும் உள்ளதாகத் தெரியவருகின்றது.

## யாழ்ப்பாணத்தில்...

பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தி வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த ஐவர் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகியமை கண்டறியப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் முல்லேரியா ஆய்வு கூடம் என இரண்டிலும் 920 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 9 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தி வர்த்தக நிலையங்களில் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 4 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அந்தப் பரிசோதனையில் பங்கேற்ற யாழ்ப்பாணம் குமாரசாமி வீதியைச் சேர்ந்த ஒருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் பணியாற்றும் பட்டதாரிப் பயிலுநர் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

கிளிநொச்சி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கிளிநொச்சி கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.” என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் எனக்கு எதிராக போலிப் பிரசாரம்!

## கோட்டாபய முக்கியமல்ல, கொள்கையே முக்கியம் வவுனியாவில் நேற்று முழங்கினார் ஜனாதிபதி



வவுனியா, ஏப்.04

நிறுவனமயப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் அரசாங்கத்துக்கும் எனக்கும் எதிராக முன்னெடுத்துவரும் போலிப் பிரசாரங்களை மக்கள் தோல்வியுறச் செய்யவேண்டும். நான் அதிகாரத்துக்கு வரும்போது வெள்ளை வான், முதலைகள், சுறாக்கள் பற்றி போலிப் பிரசாரங்களை முன்னெடுத்தவர்கள் இன்று சுற்றாடல் பற்றி பேசுகின்றனர். எனவே, கோட்டாபய ராஜபக்ஷ முக்கியமல்ல, என்னை இந்த இடத்திற்கு கொண்டு வந்த கொள்கையும் பலமுமே முக்கியமானது என்று நான் எப்போதும் கூறி வருகின்றேன். நாம் அதனையே பாதுகாக்க வேண்டும். எதிர் சக்திகள் முன்னெடுத்துவரும் போலிப் பிரசாரங்களின் நோக்கம் இந்தக் கொள்கையை தோல்வியுறச் செய்வதாகும். இருப்பினும், மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளையே நான் நிறைவேற்றி வருகிறேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தான் அதிகாரத்திற்கு வரும்போது வீழ்ச்சியுற்றிருந்த பொருளாதாரம், கொரோனா நோய்த் தொற்றுக்கு மத்தியலும்கூட தேசிய பசுமைப் பொருளாதாரமாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தனது பதவிக்காலத்தில் மக்களின் பிரச்னைகளை தீர்க்க முடியாமல் போகுமானால் தன்மீது குற்றம் சுமத்துமாறு ஜனாதிபதி மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட வெடிவைத்தகல்லு கிராம சேவகர் பிரிவின் போகஸ்வெள மகா வித்தியாலய வளாகத்தில் நேற்று இடம்பெற்ற கிராமத்துடன் கலந்துரையாடல் 17ஆவது நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது பேசுபொருளாக உள்ள விடயம் குறித்து கவனத்திற்கு கொண்டு வந்த ஜனாதிபதி, நுகர்வுக்காக இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருள்களினதும் தரம் தொடர்பில் தொடர்ச்சியாக பரிசீலனைக்குட்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட ஒருதொகை தேங்காய் எண்ணெய் நுகர்வுக்கு பொருத்தமானதல்ல என அண்மையில் கண்டறியப்பட்டிருப்பது இந்த பரிசீலனையின் பெறுபேறாகவே ஆகும். பரிசீலனையை தொடர்ச்சியாக மேற்கொண்டு நுகர்வு பொருள்களின் தரத்தை உறுதிப்படுத்துவது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பாகுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தான் அதிகாரத்திற்கு வந்து குறுகிய காலப்பகுதியில் மேற்கொண்டுள்ள பணிகள் பற்றி விளக்கிய ஜனாதிபதி, சுற்றாடலுக்கு பாரிய அழிவை ஏற்படுத்திவந்த செம்பனை அல்லது முள்தேங்காய் பயிர்ச் செய்கையை முழுமையாக தடை செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

தேங்காய் எண்ணெய் நுகர்வில் சாதகமான பெறுபேறுகளை அறிந்து பாம் ஒயில் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டது. நாட்டினுள் போதைப்பொருள் கொண்டு வரப்படுவதற்கான வழிகளும் மூடப்பட்டுள்ளன. சுற்றிவளைப்புகளின் மூலம் போதைப்பொருள் மற்றும் நுகர்வுக்கு பொருத்தமற்ற பொருட்களை கைப்பற்றுவதற்கு முடிந்துள்ளது.

தான் அதிகாரத்திற்கு வரும்போது வெள்ளைவான், முதலைகள், சுறா மீன்கள் பற்றி எல்லாம் போலிப் பிரசாரங்களை சமூகமயப்படுத்திய குழுக்கள் தமது போலிப் பிரசாரங்கள் வெற்றியளிக்காத நிலையில் தற்போது சுற்றாடல் பற்றி போலியான மற்றும் மோசமான கருத்துக்களை சமூகமயப்படுத்தி வருகின்றனர்.

நிறுவனமயப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் அரசாங்கத்துக்கும் தனக்கும் எதிராக முன்னெடுத்துவரும் போலிப் பிரசாரங்களை தோல்வியுறச் செய்து தன்னை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வந்த கொள்கையைப் பாதுகாக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ-எ)

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் ஒருதடவை பிரான்சிலிருந்து லண்டனுக்கு விமானத்தில் பயணம் செய்திருந்தார்.

ஒரு பயணி லண்டனுக்குள் பிரவேசிக்கும் போது தீர்வையற்ற கடைகளில் மதுபானப் போத்தல்களை வாங்கிச் செல்வது வழமை.

தீர்வையற்ற கடைகளில் விற்கப்படும் விலை மிக மலிவானது என்பதால் போகின்றவர் மது அருந்துபவராக இல்லாவிட்டாலும் மற்றையவர்களுக்காக வாங்கிச் செல்வது உண்டு.

நண்பர் இரண்டு போத்தல்களுடன் சென்றிருக்கிறார்.

சுங்கப்பகுதியைக் கடந்து இவர் செல்லும் போது இவரை மறித்த சுங்க அதிகாரிகள் இவரைச் சோதனையிட்டபோது இரண்டு போத்தல்கள் இவரிடமிருந்ததைப் பார்த்துவிட்டு, ஒரு போத்தல் மாத்திரமே எடுத்துச் செல்ல அனுமதி உண்டு என்றும் மற்றைய போத்தலுக்கு இவர் வரியைச் செலுத்தவேண்டும் என்றும் கூறிவிட்டார்கள்.

வரி என்றால் அது போத்தல் விலையிலும் பார்க்க அதிகமாக இருக்கும்.

அவர் ஒரு போத்தலை எறிந்துவிட்டு போனாலே இவருக்கு இலாபம்தான்.

திரும்பி பின்னால் சென்றவர், குப்பை போடும் இடத்தில் இந்த மதுபானப் போத்தலை போட முன்னர், வீணாக எறிகின்ற போத்தல்தானே கொஞ்சத்தை குடித்துவிட்டு எறிவோம் என்று போத்தலை உடைத்து இரண்டு மூன்று முடறு குடித்துவிட்டு போத்தலை எறிந்துவிட்டு திரும்பி வந்தார்.

அதற்கு அந்த சுங்க அதிகாரி, நீர் உள்ளே வந்து என்னிடம் Declared பண்ணியது இரண்டு போத்தல்களை. இதற்கு நீர் வரியைக் கட்டத்தான் வேண்டும். என்னிடம் இரண்டு போத்தல்களை Declared பண்ணிவிட்டு இப்போது நீர் ஒன்றுக்கு வரி செலுத்தாமல் விடமுடியாது என்று வரியைக் கட்டவைத்த பின்னரே, அவரை லண்டனுக்குள் செல்ல அனுமதித்தார்.

இலங்கைக்குள் புற்றுநோயை உண்டாக்கக் கூடிய தேங்காய் எண்ணெயை நாட்டுக்குள் அனுமதித்த விவகாரம் இப்போது பரவலாக பேசப்படுகின்றது.

இந்தச் செய்தியைப் பாத்தபோதுதான், இலங்கை தேங்காய் எண்ணெயையும் இறக்குமதி செய்கின்ற விடயமே பலருக்கு தெரியவந்திருக்கும்.

நாடுமுழுவதும் கடலால் சூழப்பட்ட நமது நாடு மீன்களையே இறக்குமதி செய்கின்றபோது, தேங்காயையோ அல்லது தேங்காய் எண்ணெயையோ இறக்குமதி செய்வது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

ஏராளம் மெற்றிக்தொன் தேங்காய் எண்ணெய் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டதோடு அவை நாடுமுழுவதும் விநியோகிக்கப்பட்டு விட்டதாலேயே நாடுமுழுவதும் உள்ள தேங்காய் எண்ணெயை பரிசோதிக்கும் வேலை நடந்துவருகின்றது.

இது ஒன்றும் தலைக்கு வைப்பதற்காக மட்டும் விற்கப்படும் எண்ணெய் அல்ல. உணவுக்காக விற்கப்படுவது.

ஒரு நாட்டுக்குள் கொண்டுவரப்படும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து பரீட்சித்துப்பார்க்காமலே அவை நாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றன என்பது இந்தச் சம்பவத்தின் பின்னர் தான் வெளியே தெரியவந்திருக்கின்றது.

இலவச சுகாதார சேவையை மக்களுக்கு வழங்குவதன் மூலம் பெருமைபெற்ற நமது நாட்டில், உணவுக்காக கொண்டுவரப்படுகின்ற உணவுப்பொருட்கள் இத்தனை அலட்சியமான முறையில் கொண்டுவரப்படுவதை அறிந்த பின்னர் உணவு உட்கொள்ளவே மனது அஞ்சும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த விவகாரம் பத்தோடு பதினொன்றாக தட்டிவிட்டுச் செல்லக்கூடிய விவகாரம் அல்ல. அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழித்தவர்கள் நாங்கள் என்று பெருமைகொள்ளவதை விட இது மிகப் பெரிய 'பயங்கரவாதம்' என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும்.

நமது தேங்காய் எண்ணெயை அதிக விலை கொடுத்து வாங்கும் நாடுகள் பின்னர் தமது தரமற்ற தேங்காய் எண்ணெயை நமக்கு அனுப்புகின்றனவா என்ற சந்தேகம் எழுவதையும் தவிர்க்கமுடியவில்லை.

பின்னர் நமக்கு மருந்துகளும் அவை தானே அனுப்பவேண்டும்.

மேலே பிரிட்டனின் சுங்கப்பகுதியினரின் கடமை உணர்வை சுட்டிக்கட்டியிருந்தது நமது சுங்கப்பகுதியும் அதுபோல விழிப்பாக இருக்க வேண்டும் என்பதை சுட்டவே.

இல்லாவிட்டால் நம் ஒவ்வொருவரையுமே கடவுளாலும் காப்பாற்றமுடியாது!

- ஊர்க்குருவி.

## உழைத்து சேமிக்கும் மக்களாக எமது மக்கள் மாற வேண்டும்

### பிள்ளையான் அறிவுரை

வாகரை, ஏப்.04

வாகரை பிரதேச மக்கள் ஆரம்ப கால கஷ்டங்களிலிருந்து மீண்டு உழைக்க ஆரம்பித்துள்ளனர். அதற்கு அரசாங்கமும் எல்லாத் திணைக்களங்களும் தங்களாலான உதவிகளை செய்கின்றன. எனவே, எமது மக்கள் உழைத்து சேமிக்கின்ற மக்களாக மாற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பிப்பிஞ்சா செய்கை விவசாயிகள் சந்திப்பும், உதவி வழங்கும் நிகழ்வும் மாங்கேணியில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் செய்யப்படும் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதில் பாரிய சிக்கல்களை உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கி வந்தனர். தற்போது பிப்பிஞ்சாவுக்கு உலகளாவிய ரீதியில் அது வர்த்தகப் பொருளாக மாறியுள்ளது. அதற்கு தகுந்த மண் வாகரையில் கிடைத்திருப்பதன் காரணமாக பெருமளவு பொருளாதாரத்தை பெற்றுத்தரக்கூடிய பொருளாக பிப்பிஞ்சா மாறியுள்ளது.

எதிர்காலத்தில் இதேபோன்று தானிய உற்பத்திகளை இப்பகுதியில் மேற்கொள்வதற்கு எங்களால் முடிந்த உதவிகள் வழங்கப்படும். இந்த மண்ணை நம்பி வாழுகின்ற மக்களை அறிவூட்டி தெளிவூட்டி அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற்றுக்கொடுத்து இந்த மண்ணிலே அவர்களை வாழ வைப்பதுதான் என்னுடையதும் இந்த அரசாங்கத்தினுடைய எதிர்பார்ப்பாகும். அதனை நாங்கள் எல்லோரும் சேர்ந்து செய்வோம்.

இங்கு விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்து தீர்த்து வைப்போம். இப்பகுதி மக்கள் உழைத்து சேமிக்கின்ற மக்களாக மாற வேண்டும். அதை நாங்கள் கண்கூடாக பார்த்து மகிழ்வதுதான் எங்களது மகிழ்ச்சி என்றும் தெரிவித்தார்.




**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.04.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, பங்குனி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# நில ஆக்கிரமிப்பு

மட்டக்களப்பில் மீண்டும் நில ஆக்கிரமிப்பு தொடர்பான பிரச்னையொன்று கூட்டமைப்பினரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே தமிழ் மக்களின் மேச்சல் தரை மரமுந்திரிகை செய்கைக்கென பெரும்பான்மையினத்தவர்களால் ஆக்கிரமிக்கப்படுவதாக குற்றம்சாட்டுக்கள் எழுந்திருந்தன. இதுதொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் பலரும் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து தற்காலிகமாக இந்தப் பிரச்னை அமைதியடைந்தது. ஆனால், மீளவும் வேதாளம் முருங்கை மரத்தில் என்பதுபோல் – நில ஆக்கிரமிப்பு தொடர்பான பிரச்னை சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. உண்மையில் இந்தப் பிரச்னை ஏதோவொரு வகையில் தொடர்கதையாகவே இருக்கப்போகின்றது. ஏனெனில், மாகாண சபையின்கீழ் இருக்கும் காணி அதிகாரம், சரியான வகையில் பிரயோகிக்கப்படவில்லை. பிரயோகிப்பதற்கான சூழலும் இதுவரையில் ஏற்படவில்லை. இவ்வாறானதொரு நிலையில்தான் நில ஆக்கிரமிப்பு என்பதும் ஒரு தொடர் பிரச்னையாக நீடிக்கின்றது.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும்தான், தமிழ் மக்கள் ஒப்பீட்டடிப்படையில் ஓரளவு பலமாக இருக்கின்றனர். அதாவது, சனத்தொகை அடிப்படையில் பலமாக இருக்கின்றனர். ஆனால், அந்த நிலைமையும் தற்போது கேள்விக்குள்ளாகிவருகின்றதா? என்னும் கேள்வி எழுகின்றது. காலத்திற்கு காலம் ஆட்சியமைத்த அனைத்து அரசாங்கங்களுமே, திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு ஆதரவாக செயற்பட்டிருந்தன. இதில் பிரதான கட்சிகள் எவையும் விதிவிலக்கல்ல. காணிகளை பெரும்பான்மைக்கு பகிர்ந்தளிப்பதில் பிரச்னையில்லை. ஆனால், அதில் சமத்துவ கொள்கை பின்பற்றப்படவேண்டும். ஓர் இனத்தை நில ரீதியில் பலவீனப்படுத்தும் வகையில் அது அமைந்திருக்கக் கூடாது.

ஆனால் துரதிஸ்டவசமாக இந்த விடயத்தை எந்தவோர் அரசாங்கமும் கருத்தில் கொள்ளவில்லை. இந்த பிரச்னையை நிரந்தரமாக தீர்க்கவேண்டுமாயின், மாகாண சபைக்கான காணி அதிகாரம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதனை உறுதிப்படுத்துவதிலேயே தற்போது தமிழ் கட்சிகள் அனைத்தும் செயற்படவேண்டும். 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பிலும் அதனை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பிலும் கருத்தொருமித்து, உறுதியான நிலைப்பாட்டை கட்சிகள் கடைப்பிடிக்க வேண்டும். இதுதொடர்பில் உரத்துக் குரல் கொடுக்கவேண்டும். காணி, பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலான 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் என்பது, சர்வதேச கவனத்தை பெற்றிருக்கின்ற நிலையில், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தாமையின் காரணமாகவே, இவ்வாறான பிரச்னைகள் மேலெழுகின்றன. பெரும்பான்மையினத்தை சேர்ந்த தனிநபர்களும், அரசியல்வாதிகளும் தங்களின் விரும்பங்களுக்கேற்ப வடக்கு கிழக்கிலுள்ள அரச காணிகளை கையாள முற்படுகின்றனர். இதன் காரணமாகவே நில ஆக்கிரமிப்பு பிரச்னை தொடர்கின்றது. மாகாண சபைகள் காணியதிகாரத்தை முழுமையாக பிரயோகிக்க முடியாமையே இதற்கான பிரதான காரணமாகும்.

கூட்டமைப்பு, விக்கினேஸ்வரன் தரப்பு, சிவில் சமூக அமைப்புக்கள் அனைத்தும் – தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் கள்ளமௌனம் சாதிப்பார்களாயின், நில அபகரிப்பு தொடரவே செய்யும். அரச காணிகள், பெரும்பான்மை அரசியல் செல்வாக்கிற்குட்பட்டவர்களால் அவ்வப்போது அபகரிக்கப்படும். இந்த நிலைமையை, அவ்வப்போது நீதிமன்றத்தை நாடுவதாலோ அல்லது, எதிர்ப்புக்களை காண்பிப்பதாலோ நிறுத்த முடியாது. இதற்கு நிரந்தரமான தீர்வு காணப்படவேண்டும். தற்போதைய நிலையில், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப்படுவதற்கான, ஆகக்குறைந்தது காணியதிகாரத்தை முழுமையாக தக்கவைப்பதன் ஊடாக மட்டுமே எதிர்கொள்ளமுடியும். வேறு வழியெதுவுமில்லை.

# உள்ளூர் வர்த்தகத்துக்கு மட்டும் தடை; தெற்கு நிறுவனங்களுக்குத் தாராளம்

## வடக்கு சுகாதாரத்துறையின் முடிவுக்கு கண்டனம்



*யாழ். நகரத்தில் ஒரு பகுதியில் உள்ளூர் வர்த்தகத்தை மாத்திரம் முடக்கி, தென்னிலங்கை மற்றும் பெரு நிறுவனங்களை அனுமதித்துள்ள வடக்கு சுகாதாரத்துறையின் முடிவிற்கு பலரும் கண்டனம் தெரிவித்து வரும் நிலையில், யாழ் வணிகர் கழகமும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.*

*இது தொடர்பில் வணிகர் கழகம், யாழ்ப்பாணமாவட்ட செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.*

*அந்த கடித விவரம் வருமாறு -*

*கடந்த வெள்ளிக்கிழமை 26.03.2021 தொடக்கம் நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகள் முடக்கப்பட்டதனால் வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது .*

*இந்த விடயத்தில் சில பாரபட்சமான விடயங்களும் பின்பற்றப்பட்டுள்ளது என்பதை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.*

*1. வர்த்தகர்களின் செயற்பாடுகள் முற்று முழுதாக முடக்கப்பட்ட நிலையில் அதே முடக்கப்பட்ட பகுதிகளில் வங்கிகள் , நிதி நிறுவனங்கள் , காப்புறுதி நிறுவனங்கள், நகை அடகு நிலையங்கள் போன்றவை வழமை போல் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இது எந்த விதத்திலும் நியாயமாக கருத முடியாதுள்ளது.*

*2. கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் சுமார் 1440 நகர வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றோம். இதில் ஆக 43 பேருக்கு மாத்திரமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதாரப்பிரிவினரால் தெரிவிக்கப்படுகின்றது. இது விகித அடிப்படையில் 3% ஆகக் கருதப்படுகின்றது.*

*3. நகரத்தின் முக்கிய பகுதி முடக்கப்பட்டு வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளதால் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யும் மொத்த வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கூட்டுறவுத்துறை மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விநியோகம் செய்ய முடியாதுள்ளது.*

*4. கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இருந்து கொரோனா தாக்கம் காரணமாக வர்த்தகத்துறை பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது தங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள தடையானது அவர்களை மேலும் பாரியளவில் பொருளாதார ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.*

*5. நாட்டின் எல்லா பகுதிகளிலும் கொரோனா தாக்கம் இருப்பது தாங்கள் அறிந்ததே. அப்படி இருக்கும் போது யாழ்ப்பாண நகர வர்த்கர்களை வர்த்தகம் செய்யவிடாது தடை விதித்து அவர்களை பாதிப்படையச் செய்திருப்பது கவலையளிக்கிறது.*

*6. தமிழ் சிங்களப் புத்தாண்டு வர இருக்கும் இவ்வேளையில் தாங்கள் ஏற்படுத்திய தடையானது வர்த்தகர்கள் , உள்ளூர் உணவு உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்கள் , விவசாய உற்பத்திப் பொருட்களில் ஈடுபடுவோர் என பல துறை சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளை பாரிய பாதிப்புக்களையும் , பாரிய நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.*

*7. நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகத்துறையை முடக்கிவிட்டு ஏனைய அதிகளவான மக்கள் கூடும் சில நிறுவனங்களுக்கு சகஜமாக செயற்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள் ளது. இது எமது பகுதி வர்த்தகத்துறை பாதிப்படைய வேண்டும் என்ற நோக்கில் பாரபட்சமாக செய்யப்பட்டது என்று வர்த்தகர்கள் கருதுகின்றார்கள்.*

*8. பூட்டப்பட்டுள்ள கடை உரிமையாளர்கள் மற்றும் அங்கே தொழில் புரியும்*

*தொழிலாளர்களுக்கான நிவாரணத்தையும் தொழில் இழப்புக்கான நட்ட ஈட்டையும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.*

*ஆகவே நாம் மேலே குறிப்பிட்ட விடயங்களை கவனத்தில் எடுத்து எமக்கு நீதி வழங்குவதுடன் வரும் திங்கட்கிழமையிலுருந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
அதிர்ஷ்டத்தை விடவும் உழைப்பு உங்களுக்கு அதிகம் உதவும். ஆன்மிக சிந்தனை அமைதி தரும். புதிய வருமானம் ஒன்று வரும். பேச்சினால் பிரச்னை வராமல் மிகவும் கவனமாக இருங்கள்.

**இடபம்**
அலுவலக விஷயங்களில் இன்று வெற்றி காண்பீர்கள். நீண்ட நாளாக இருந்த சருமப் பிரச்னைகள் முடிவுக்கு வரும். வாழ்க்கைத்துணையிடம் இருந்த பிரச்னைகள் தீரும்.

**மிதுனம்**
செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். பூச்சிக்கடி ஏற்படலாம். நிறையப் பேசிக் கவர்வீர்கள். ஷேர் முதலீடுகள் செய்வீர்கள். முகராசியால் வெல்வீர்கள். ரகசியங்களைக் காக்க வேண்டும்.

**கடகம்**
கவனமான செயல்பாடு காரணமாக வெற்றி பெறுவீர்கள். எதிலும் தடை, தாமதம் இருந்தாலும் இறுதி வெற்றி உங்களுக்கே. பணிச்சுமையை மிகுந்த திறமையுடன் சமாளிப்பீர்கள்.

**சிம்மம்**
உயிர் நண்பர்களுக்கு உங்கள் உழைப்பால் நன்மை செய்வீர்கள். புதிய உத்வேகம் உருவாகி செயல்பாடுகளில் முன்னேறுவீர்கள். வாழ்க்கைத் துணைக்கு பதவி, சம்பளம் உயரும்.

**கன்னி**
தனிப்பட்ட சாமர்த்தியம் காரணமாக வெற்றியை எட்டுவீர்கள். பேச்சைக் குறைத்து திறமையை அதிகரித்து வெற்றி அடைவீர்கள். கடந்த நாளை விட இன்று நன்மை கூடுதலாக கிடைக்கும்.

**துலாம்**
தாயாருக்காக செய்யும் முயற்சிகளில் தாமதம் ஏற்படக்கூடும். பிள்ளைகளுக்கு இருந்த பிரச்னைகள் தீர்ந்து நிம்மதி வரும். நீண்ட இடைவெளிக்குப் பிறகு உறவினர் ஒருவர் நன்மை செய்வார்.

**விருட்சிகம்**
சுமை தீர்ந்து நிம்மதிப் பெருமூச்சு வரும். இன உணர்வு வரும். தாயாருக்கு உங்களால் நன்மை உண்டு. வாகனம் வாங்குவீர்கள். பிள்ளைகளின் நுட்பமான யோசனையால் உயர்வுக்கு வழி கிடைக்கும்.

**தனுசு**
தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி பிரச்னையில் சிக்க வேண்டாம். தளர்ச்சி நீங்கி வளர்ச்சி கூடும். குடும்பத்தில் முன்னேற்றம் உண்டு. சிறிய பிரச்னைகள் இருக்கும். முயற்சியும், பொறுமையும் உதவும்.

**மகரம்**
சிரமங்களுக்கு இடையே சிறிய நம்பிக்கை பிறக்கும். தவறுகளைத் திருத்திக் கொள்வதன் மூலம் முன்னேறுவீர்கள். மெல்ல உழைத்து மெதுவாகத் தான் முன்னேற முடியும்.

**கும்பம்**
பிள்ளைகளுக்கு உங்களின் உதவியும் ஆதரவும் உண்டு. பணிவுடன் வெல்வீர்கள். சோம்பலைத் தவிர்ப்பது அவசியம். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். கடன் கிடைக்கும்.

**மீனம்**
வரவும், செலவும் உண்டு. முன்னேற்றம் நிதானமாக இருக்கும். மற்றவர்களுக்கு மனக்காயங்களை ஏற்படுத்த வேண்டாம். தன்னம்பிக்கை குறையாமல் கவனமாக இருக்க முயலுங்கள்.

# கனிமொழிக்கு கொரோனா!

சென்னை, ஏப். 03

தி.மு.க. மகளிர் அணிச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கனிமொழிக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆறாம் திகதி தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், கனிமொழி தி.மு.க.வுக்கு ஆதரவு திரட்டி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தார்.

இந்நிலையில், அவருக்க கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# பச்சை துண்டு போட்டால் விவசாயியா?

## முதல்வரிடம் ஸ்டாலின் கேள்வி

நாகப்பட்டனம்,ஏப். 03

விவசாயியை பிடிக்கும். ஆனால், போலி விவசாயியை பிடிக்காது. பச்சைத் துண்டு போட்டால் விவசாயியா? என தி.மு.க., தலைவர் ஸ்டாலின் கூறி உள்ளார்.

நாகப்பட்டினம் வேதாரண்யத்தில் ஸ்டாலின் பேசியதாவது:

இந்திய எல்லைக்குள் மீன்பிடிக்கும் மீனவர்களை இலங்கை கடற் படை சுட்டு கொல்கிறது.விவசாயியை பிடிக்கும் போலி விவசாயியை பிடிக்காது.பச்சை துண்டை போட்டால் விவசாயியா? பழனிசாமி விஷவாயு.விவசாயி என்றால், வேளாண் சட்டத்தை ஆதரிப்பார்களா?

டில்லியில் வேளாண் சட்டத்திற்கு எதிராக போராடுபவர்களை புரோக்கர் எனக்கூறுகிறார். புயலால் பாதிக்கப்பட்ட போது சந்திக்காத நீங்கள் விவசாயியா? விவசாயி அல்ல விஷவாயு என்பது தான் உண்மை. அதனால், அவர்களுக்கு பாடம் புகட்ட தயாராக வேண்டும். -என்றார்.

# உதயநிதியை பற்றியே ஸ்டாலினுக்கு கவலை

## அமித்ஷா கூறுகிறார்



திருநெல்வேலி, ஏப். 03

இளைஞர்கள், மீனவர்கள், விவசாயிகள், ஏழைகள் குறித்து பிரதமர் மோடி கவலைப் படுகிறார். ஆனால், ஸ்டாலின் அவரது மகன் உதயநிதி குறித்து தான் கவலைப்படுகிறார் என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் தச்சநல்லூரில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழகத்தில் 10 ஆண்டுகளாக சாமானியர்களின் ஆட்சி நடக்கிறது. ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களே ஆட்சியமைக்க நினைக்கின்றனர். மீனவர்கள், இளைஞர்கள், விவசாயிகள், ஏழைகள் பற்றி பிரதமர் கவலை. ஆனால், தி.மு.க., தலைவர் ஸ்டாலின், அவரது மகனை பற்றி கவலை தான் கவலைப்படுகிறார். ஸ்டாலின் குறிப்பிடும்படியாக பேசுவது இல்லை. எதையும் பார்த்து தான் படிக்கிறார். உதயநிதியை பற்றி நான் பேசும்போது எல்லாம் ஸ்டாலினுக்கு கோபம் அதிகரிக்கிறது. சமீபத்தில் அவர் கட்டுப்பாட்டை இழந்து, சுஷ்மா சுவராஜ், அருண் ஜெட்லி குறித்து விமர்சனம் செய்தார்.

இறந்தவர்களை பற்றி விமர்சனம் செய்வது தமிழர்களின் மரபு அல்ல. ஆனால், அருண் ஜெட்லி, சுஷ்மா சுவராஜ் குறித்து ஸ்டாலின் விமர்சனம் செய்கின்றனர். காமராஜரை இழிவுபடுத்தியவர்கள் திமுகவினர். தற்போது, மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர்கள் சுஷ்மா சுவராஜ் மற்றும் அருண் ஜெட்லியை விமர்சனம் செய்வதை வழக்கமாக கொண்டு உள்ளனர்.

முதல்வரையும், அவரது தாயாரையும் அவமரியாதை செய்த திமுகவை ஒதுக்கி வைக்க வேண்டும். -என்றார்.



# குஷ்புக்கு ஆதரவாக சென்னையில் அமித்ஷா நேற்று தேர்தல் பிரசாரம்

சென்னை, ஏப். 03

பா.ஜ.க.வேட்பாளர் குஷ்புவுக்கு ஆதரவு திரட்டும் முகமாக உள்துறை அமைச்சர் அமித்ஷா சென்னையில் நேற்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

நேற்று முன்தினம் சென்னைக்கு வருகை தந்த அமித்ஷா, துறைமுக தொகுதி பா.ஜ.கவேட்பாளர் வினோஜ் பி. செல்வத்துக்கு ஆதரவு திரட்டும் வகையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.


இந்நிலையில் பா.ஜ.கவேட்பாளர் குஷ்புக்கு ஆதரவு திரட்டும் வகையில், நேற்று முற்பகல் 10 மணிக்கு தேர்தல் பிரசாரத்தில் அமித்ஷா ஈடுபட்டார்.

மேலும் தேனாம்பேட்டையில் இருந்து திறந்த வானில் பாண்டிபஜார் நோக்கி பேரணியாக சென்ற அமித்ஷா, கூட்டணிக் கட்சி, பா.ஜ.க மற்றும் அ.தி.மு.க வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இவ்வாறு சென்னையில் தேர்தல் பிரசாரங்களில் கலந்துகொண்ட அமித்ஷா, இராமநாதபுரம் மற்றும் நெல்லையில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தியின் பின்னணியில்...





# இது ஓர் உலக நியதி!

மாலி

பங்களாதேஷின் பொன்விழா ஆண்டு இது. அத்துடன், பங்களாதேஷின் 'பிதா', ஷேக் முஜிபுர் ரஹ்மானின் நூற்றாண்டும் இதனோடு இணைகிறது. இத்தருணத்தில், பிரதமர் ஷேக் ஹசீனாவின் அழைப்பில் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பங்களாதேஷுக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டார். பொன்விழாவும் நூற்றாண்டும் இவ் விஜயத்தில் திட்டமிடாமல் இணைந்துவிட்டவை.

பங்களாதேஷ் விஜயத்தை முடித்து நாடு திரும் பிய இரண்டு தினங்களில், இலங்கைமீதான ஐ. நா. பேரவை தீர்மானம் ஜெனிவாவில் வாக்கெடுப் புக்கு வந்தது. இதுவும் திட்டமிடாமல் நிகழ்ந் ததோ என்னவோ, வாக்கெடுப்பில் பங்களாதேஷ் இலங்கை அரசுக்கு ஆதரவான விதத்தில், பிரே ரணைக்கு எதிராக வாக்களித்தது.

இந்த செய்திகளில், எதேச்சையாக சில பின்ன ணிகள் விரிகின்றன. பொன்விழா காணும் பங்களா தேஷின் 'பிதா' முஜிபுர் ரஹ்மான் என்றால், அதன் 'மாதா' இந்தியா.

பாகிஸ்தானிலிருந்து, வங்கதேசமான கிழக்கு பாகிஸ்தானின் விடுதலையைக் கோரி, தேர்தலில் அமோக வெற்றியை ஈட்டிய அவாமி லீக்கின் தலைவர் முஜிபுர் ரஹ்மான், அந்த வெற்றியின் அடிப்படையில், கிழக்கு பாகிஸ்தான் தேசிய பேரவையில் அரசாங்கம் அமைப்பதை, சுல்பிகார் அலி புட்டோவின் பாகிஸ்தான் அரசு தடுத்தது. முஜிபுர் ரஹ்மான், "இனி எமது போராட்டம் எமது விடுதலைக்கானது எமது சுதந்திரத்துக் கானது" என்று அறிவித்தார். இராணுவம் அவரைக் கைதுசெய்து கராச்சிக்கு கொண்டு சென்றது. அவர் கைதுசெய்யப்பட்ட சிலமணி நேரங்களில் பங்களாதேஷின் சுதந்திர பிரகட னத்தை முஜிபுர் ராஹ்மானின் சார்பில் அவருக்கு ஆதரவான இராணுவ மேஜர் ஒருவரான ஷியாவுர் ரஹ்மான் வானொலியில் அறிவித்தார். அவாமி லீக் தடைசெய்யப்பட, கல்கத்தாவில் நாடுகடந்த அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதியில் இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிந்தபோது, வங்காளதேசம் மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம் என்று பிரிந்து, முஸ்லிம்கள் பெரும்பான்மையான கிழக்கு வங்காளம் பாகிஸ்தானுடன் இணைந்து, கிழக்கு பாகிஸ்தான் என்று அழைக்கப்பட்டது. முஸ்லிம்கள் எனினும், இவர்கள் வங்காள மொழி பேசுபவர்கள். பாகிஸ்தான் அரசு பல்வேறுரீதியில் காண்பித்த வேறுபாடுகளில் இவர்கள் சமஷ்டி முறைமையிலான ஓர் ஆட்சியை விரும்பி செயல் படத் தொடங்கியிருந்ததில் இவை ஏற்பட்டன.

முஜிபுர் ரஹ்மானின் கைதையடுத்து, பாகிஸ் தானின் கொடூரமான இராணுவ நடவடிக்கை களில் லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். பெருமளவிலான இந்துக்களும் கல்விமான்களும் இதில் அடங்குவர். லட்சக்கணக்கானோர் தஞ்சம் கோரி, எல்லைகளைக் கடந்து இந்தியாவுக்குள் பிரவேசித்தபோது, நிலைமையைச் சமாளிக்க இந்தியா கோரிய உலக நாடுகளின் உதவி கிட்ட வில்லை. அகதிகளுக்கு பாதுகாப்பளித்து பரா மரிப்பதைவிட, பங்களாதேஷ் விடுதலைக்கு ஆதரவாக, பாகிஸ்தானுடனான யுத்தம் பொருளா தார ரீதியில் மேலானதென்று பிரதமர் இந்திரா காந்தி முடிவுசெய்தார். பிரிவினைக்கு ஆதரவான கிழக்கு பாகிஸ்தான் இராணுவத்தினருடன் முக்தி வாஹினி கெரில்லாபடையும் இந்திய இராணுவத் தால் தயாரானது. இந்திய மேற்கு பகுதி எல்லை யில் பாகிஸ்தான் தாக்குதல் ஒன்றைத் தொடங்க வும், பாகிஸ்தானுடன் முழு அளவிலான யுத் தத்தை இந்திரா காந்தி பிரகடனம் செய்தார். ஒன் பது மாதங்களில் பாகிஸ்தான் இராணுவம் சரண டைய, 1971 டிசம்பர் 15ஆம் திகதி டாக்காவை இந்திய இராணுவம் கைப்பற்றியது. 17ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்தது. பங்களாதேஷ் உரு வானது.

இந்திரா காந்தியின் இந்த வெற்றி, அமெரிக்கா உட்பட பல நாடுகளுக்கு இப்பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தையும் அதன் வல்ல மையையும் உணர்த்தியதாக இராஜதந்தர வட்டாரங்களில் அபோது கருதப்பட்டது.

பங்களாதேஷின் தோற்றத்துக்கான இந்த யுத்தத்தில் உலக அளவில் இந்தியாவுக்கு அப் போது பெரும் ஆதரவு இருக்கவில்லை. யுத்தத் தின்போது பாகிஸ்தான் விமானங்கள் இந்தியா வுக்கு மேலாக பறக்க இயலாதநிலையில் இருந் தன. இதனால், ஆயிரத்து 600 கி. மீ. தூரத்தை இந்த விமானங்கள் இந்தியாவைச் சுற்றி பறக்க நேர்ந்ததில், இடையில் விமானங்களுக்கு எரி பொருள் நிரப்பவேண்டிய தேவை ஏற்பட்டது. கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இவ்விமானங்கள் எரிபொருள் நிரப்ப பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அநுமதியளித்தார். இந்தியாவுக்கு எதிரான இலங்கை அரசின் இந்நடவடிக்கையை தமிழரசு கட்சியின் உடுவில் எம். பி., வி. தர்மலிங்கம் பாராளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்தார். பங்களாதேஷ் தொடர்பிலான இந்திரா காந்தியின் நடவடிக்கை, சிறிமாவோவை நியாயமான விதத் தில் சற்று அச்சம்கொள்ளவே செய்திருந்தது.

இதில் சுவாஷ்யமான இன்னொரு விடயம், பாகிஸ்தான் விமானங்கள் எரிபொருள் நிரப்புகை யில், சிறிமாவோவின் கோரிக்கையில் வந்த இந் திய இராணுவம், இலங்கையில் இடதுசாரி கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதல்களிலிருந்து விமான நிலையத்துக்கு பாதுகாப்பு அளித்துக் கொண்டிருந்தது.

நாடுகடந்த அரசாங்கத்தின் பங்களாதேஷ் சுதந்திர பிரகடனத்தை அறிவித்தவரான லெப்டி னன்ட் ஜெனரல் ஷியாவுர் ரஹ்மான் பின்னர் ஜனாதிபதியாகி இலங்கை வந்தார். ஜனநாயக பண்புகளுடனான ஓர் அரசியல் தலைவராக பரிணமித்த இவர், பங்களாதேஷ் தேசியவாத கட்சியை ஆரம்பித்திருந்தார். 'சார்க்' அமைப்பின் தோற்றத்துக்கும் காரணமாக இருந்தவர்களில் ஒருவர்.

நாடு திரும்புமுன் கொழும்பில் நடந்த பத்திரி கையாளர் மாநாட்டில் பத்திரிகையாளர்களை பங்களாதேஷ் வர அழைப்பு விடுத்தவர், இயலுமா னால் இப்போதே என்னுடன் விமானத்தில் வரலாம் என்றும் நகைச்சுவையாக சொன்னார். அவருடன் கூடவே அவரது மனைவி காலிதா ஷி யாவும் வந்திருந்தார். இராணுவ சதி ஒன்றில் ஷியா வுர் ரஹ்மான் கொலைசெய்யப்பட்ட பின்னர், காலிதா ஷியா பிரதமராகவிருந்தார். இப்போது, எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சியின் தலைவியாகவிருக்கிறார்.

பங்களாதேஷ் யுத்த காலத்தில், டில்லியிலி ருந்து ஒலிபரப்பாகும் 'ஆகாஷவாணி' செய்திகள், தொலைக்காட்சி இல்லாத அக்காலத்தில் தொலைக்காட்சி பார்ப்பதுபோல இருக்கும். சரோஜ் நாராயணசுவாமி, விஜயம் என்ற பெண் செய்தி வாசிப்பாளர்கள் வரலாற்றோடு இணைபவர்கள்.

ஆக, இலங்கையில் மனித உரிமைகள் தொடர் பான ஜெனிவா வாக்கெடுப்பில் பாகிஸ்தான் எதிராக வாக்களிக்க, இந்தியா நடுநிலை வகித்தது. பங்களாதேஷ் இலங்கைக்கு ஆதரவாக, பாகிஸ் தானுடன் இணைந்து பிரேரணைக்கு எதிராக வாக்களித்தது. இது, உலக அரசியல் நியதி.

# சாதாரண தரப் பரீட்சை முடிவு ஏப்ரல் இறுதியில்

கொழும்பு, ஏப். 03

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் ஏப்ரல் இறுதிக்குள் கிடைக்கும் என்று நம்புவதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரி வித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை கண்டி யில் நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- ஜூன் மாதத்திற்குள் கபொ. த. சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகளை வழங்க முடியு மென எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை பல்கலைக்கழ கங்கள் தொடர்பாக முழுமை யாக முடிவு எடுக்கப்பட வில்லை. ஆனால் அவற்றுக் கும் விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுப்போம்.

அந்தவகையில் கூடிய விரைவில் பல்கலைக்கழகங்க ளைத் தொடங்க நாங்கள் பணி யாற்றி வருகிறோம்-என்றார்.

# நாட்டின் சில பகுதிகளில் வெப்பநிலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 03

நாட்டின் சில பகுதிகளில் வழமையை விட 4 பாகை செல் சியஸ் வெப்பம் அதிகரித்துள்ள தாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள் ளது.

கடந்த 24 மணித்தியாலங் களில் திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் அதிகூடிய வெப்பநிலை பதி வாகியுள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

இந்த இரு மாவட்டங்களி லும் 36.8 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இரத்மலானை, கொழும்பு, காலி, மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் 4 பாகை செல்சியஸ் வெப்பநிலை அதிகரித்துள்ளது.

திருகோணமலை, மட்டக் களப்பு, அம்பாறை, மொனரா கலை, பொலன்னறுவை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் கடும் வெப்ப மான காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள் ளது. (அ)

# 320 பேர் பூரண குணமடைவு

கொழும்பு, ஏப். 03

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்றுமேலும் 320 பேர் பூரண மாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரை கொரோனா தொற்றுக் குள்ளானவர்களில் 90,021 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந் தோர் எண்ணிக்கை 575 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள் ளானவர்களின் எண்ணிக்கை 93,128 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# ஐ.தே.கட்சியை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

கொழும்பு, ஏப். 03

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்த சகல அமைப்புக் களையும் மீள கட்டியெழுப்புவ தற்கான வேலைத்திட்ட மொன்று ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய ஆலோ சனைக்கு அமைய இந்த செயற் பாடுகள் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்த வில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இதற்கான தீர்மானங்கள் எட் டப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

# மோ.சைக்கிள் விபத்தில் இரண்டு பேர் படுகாயம்

திருகோணமலை,ஏப்.4

திருகோணமலை தலைமை யக பொலிஸ் பிரிவிற்கு உட் பட்ட உட்துறைமுக வீதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந் துள்ளனர்.

படுகாயமடைந்த மூவரும் திருகோணமலை பொது வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நேர்ந் துள்ளது. விபத்தில் இருவாக னங்களும் சேதமடைந்துள்ளன.

விபத்தில் ஓட்டோச் சாரதி யான திருகோணமலை - ஜமாலியா, நெல்சன் புறபகுதி யைச் சேர்ந்த பரீஸ்தீன் (வயது- 37) மற்றும் மோட்டார் சைக்கி ளில் பயணித்த உப்புவெளி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஆனந்தபுரி பகுதியை சேர்ந்த 19 வயதுடைய இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் திரு கோணமலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயருக்கு ரிஷாத் அஞ்சலி

மன்னார், ஏப். 04

மன்னார் ஆயர் இல்லத்தில் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டுள்ள, மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூதவுடலுக்கு இகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் நேற்று இறுதி மரியாதை செலுத்தினார்.

மன்னார் பிரதேச சபை தவிசாளர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் அன்னாரின் பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## முரண்பாடுகளுக்கு முடிவுகட்ட

# பங்காளிகளை அவசரமாக சந்திக்கிறார் கோட்டாபய!

கொழும்பு, ஏப். 04

**ஆளுங் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையில் அடுத்தவாரம் முக்கிய சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.**

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு பங்காளிக்கட்சித் தலைவர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்து, இறுதி முடிவை எடுக்கும் நோக்கில் பங்காளிகளை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின்போது எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே மாகாணசபைத் தேர்தலை நடத்தும் முறைமை தீர்மானிக்கப்படும் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.



மேற்படி கட்சி தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் பங்கேற்கவுள்ளார்.

# மத நல்லிணக்கத்தின் மறு வடிவமே ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை!

## நானாட்டான் மாரியம்மன் ஆலய நிர்வாகம் இரங்கல்

மன்னார், ஏப். 04

மறைந்த ஆயர் அவர்கள் மதத்திற்காக குரல் கொடுத்ததை விட மனித நேயத்திற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் குரல் கொடுத்த செயற்பாடுகளே இங்கு அதிகம். ஆயர் அவர்கள் இறைபாதம் அடைந்த செய்தி நானாட்டான்பிரதேச சைவ மக்கள் அனைவரையும் மிகவும் பாதித்துள்ளது என நானாட்டான் சிறி செல்வ முத்து மாரியம்மன் ஆலய நிர்வாகம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார்மாவட்டத்தில்பெரும்பான்மையாக உள்ள மூன்று மதங்களையும் அனுசரித்து மனித நேயத்தோடு வழி நடத்திய நல்லதொரு தலைமை பண்பாளர் மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் தேகு கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை.

மறைந்த ஆயர் மதத்திற்காக குரல் கொடுத்ததை விட மனித நேயத்திற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் குரல் கொடுத்த செயற்பாடுகளே இங்கு அதிகம். -என்றுள்ளது.

# யாழில் பாடசாலையின் பெயரில் பணம் சேகரிக்கும் ஆசாமிகள்!

யாழ்ப்பாணம், ஏப். 04

புத்தூர், சிறுப்பிட்டி, ஆவரங்கால் மற்றும் அச்சுவேலி பிரதேசங்களில் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியில் கல்வி பயிலும் வறிய - அங்கவீனமான மாணவர்களுக்கான உதவி என்ற பெயரில் பணம் சேகரிக்கும் நடவடிக்கையில் சில ஆசாமிகள் ஈடுட்டுள்ளனர்.

மேலும் சில இடங்களில் கல்லூரியின் பெயரில் நவீல் பாடசாலை போன்ற சில அமைப்புக்களுக்கான நன்கொடை சேகரிக்கின்றோம் என்ற ரீதியிலும் அவர்கள் பணம் சேகரிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு பணம் சேகரிக்க எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அவ்வாறு பணம் சேகரிப்போருக்கும் தமது கல்லூரிக்கும் அல்லது கல்லூரியில் இயங்கும் பழைய மாணவர் சங்கம் போன்ற எந்த அமைப்புக்கும் தொடர்புமில்லையெனவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

இதுகுறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் இவ்வாறு பணம் சேகரிப்பவர்களின் விவரம் தெரிந்தால் அது குறித்து கல்லூரி அதிபருக்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ முறையிடுமாறும் கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டார்.



# பொய்ப்பிரசாரத்தால் தடுப்பூசி ஆராய்ச்சி வல்லுநர்கள் அச்சம்

அநுராதபுரம்,ஏப்.04

எதிர்க்கட்சியினரின் பொய்ப் பிரசாரங்களால் சீனாவின் நன்கொடையாக இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற சீனோபார்ம் கொரோனா தடுப்பூசியை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை நாளுக்கு நாள் தாமத மாவதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

இவ்வாறான பொய்ப்பிரசாரங்கள், தவறான தகவல்கள் பரப்பப்படுவதால் தடுப்பூசி ஆராய்ச்சி குறித்த குழு வல்லுநர்கள் தங்கள் பணியைச் செய்வதற்குகூட அஞ்சுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். எனவே, மக்கள் மத்தியில் வீண் அச்சத்தை ஏற்படுத்தி அரசியல் லாபம் தேடிக்கொள்ள வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# சீருடை அணிந்த பொலிஸாரை தாக்கவோ தடுக்கவோ முடியாது

## பொலிஸ் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 03

சீருடை அணிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை யாராலும் தாக்கவோ அல்லது அவர்களது கடமைகளைத் தடுக்கவோ முடியாது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட கருத்துத் தவறாகப் புரிந்துகொண்டு சமூக ஊடகங்களில் பரவும் செய்திகளுக்கு பதிலளிக்கும்போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனைக் கூறினார்.

எந்தவொரு காரணமும் இல்லாமல் பொலிஸ் உத்தியோகத்தர், ஒருவரைத் தாக்கினால், அவர் உயர் பொலிஸ் அதிகாரிகளிடம் முறைப்பாடு வழங்க முடியும். சட்ட நடவடிக்கை எடுக்க வாய்ப்பு உள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கூறினார்.

# பொலிஸாரின் கைவிரலை கடித்த இளைஞன் கைது

கொழும்பு, ஏப். 03

பொலிஸாரின் கை விரலை கடித்ததாக இளைஞன் ஒருவர் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நாகவிகாரையில் கடமையிலிருந்த பொலிஸாருக்கும் அங்கு பணிபுரிந்த இளைஞனுக்கும் இடையில் நேற்று முன் தினம் இரவு வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அது தொடர்ந்து கைகலப்பாக மாறியுள்ளது. இதில் பொலிஸாரின் கை விரலை குறித்த இளைஞன் கடித்துள்ளார்.

காயத்துக்குள்ளான பொலிஸார் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், விரலை கடித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கோவில் வீதி மீள திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் நாவலர் வீதி தொடக்கம் நல்லூர் ஆலயம் வரையான பகுதி நேற்று சனிக்கிழமை முதல் போக்குவரத்து மீளத் திறக்கப்பட்டுள்ளது. நல்லூரரான் வளைவு கட்டுமானப் பணிக்கு வசதியாக கடந்த 08ஆம் திகதி முதல் அந்த வீதியினூடாக போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது.

இதற்கு மாற்றுப் பாதையாக நல்லூர் ஆலயத்திலிருந்து கோவில் வீதியுடாகச் செல்லும் சிறிய வாகனங்கள் செட்டித்தெரு வீதி செட்டித்தெரு ஒழுங்கை ( சின்னமயா மிஷன் வீதி) ஊடாகவும் நாவலர் வீதியிலிருந்து நல்லூர் ஆலயத்துக்கு கோயில் வீதியில்பயணிக்கும் வாகனங்கள் செட்டித்தெரு ஒழுங்கை செட்டித்தெரு ஊடாகவும் பயணித்தன.

இந்நிலையில் தற்போது கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தமையை அடுத்து குறித்த வீதி போக்குவரத்துக்காக மீளத் திறக்கப்பட்டுள்ளது.

# சீன, ரஷ்யதூதுவர்கள் அமைச்சர் தினேஷ்டன் சந்திப்பு

கொழும்பு,ஏப்.04

இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மெட்டேரி மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங் ஆகியோரை வெளிவிவகார அமைச்சில் வைத்து அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சந்தித்தார்.

இதுதொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக நல்கிய உதவிகளுக்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பாக வெளிவிவகார அமைச்சர், ரஷ்யா மற்றும் சீன அரசாங்கங்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளித்தமை குறித்து அமைச்சர் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். இலங்கையின் நட்புறவுகள் மற்றும் சீனா மற்றும் ரஷ்யாவுடனான இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து அமைச்சர் இரு நாடுகளின் தூதுவர்களைத் தனித்தனியாக சந்தித்து விரிவாகக் கலந்துரையாடினார்- என்று குறிப் பிடப்பட்டுள்து. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் உச்ச பாதுகாப்பு

## 12 ஆயிரம் படையினர் களத்தில்



கொழும்பு, ஏப்.04

**ஈஸ்டர் ஞாயிறு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள அனைத்து தேவாலயங்களினதும் பாதுகாப்பிற்காக 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆயுதப்படை வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்**

பொலிஸ் மற்றும் அதிரடிப்படையைச் சேர்ந்த மொத்தம் 9,365 அதிகாரிகள் கடமைக்கு அனுப்பப்பட்டுள்ளனர், மேலும் 2,522 முப்படை வீரர்களும் பாதுகாப்பு வழங்க ரோந்துப் பணியில் ஈடுபடுவார்கள். நீர்கொழும்பு, சிலாபம், மற்றும் மட்டக்களப்பைச் சுற்றியுள்ள தேவாலயங்களில் சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன-என்றார்.

# கம்பஹாவில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 04

நாட்டில் நேற்று முன் தினம் கொவிட்-19 தொற்றுறுதியான 211 பேரில் அதிகமானோர் கம்பஹா மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொவிட்-19 பரவல் தடுப்பு தேசிய செயற்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் 35 பேருக்கும் கொழும்பில் 32 பேருக்கும் நேற்று முன் தினம் தொற்றுறுதியாகியுள்ளது.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து வந்த 28 பேருக்கும் நேற்று முன் தினம் தொற்று உறுதியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சாராவை கண்டுபிடியுங்கள்! முஜிபூர் ரஹ்மான் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 04

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சாரா உயிருடன் இருக்கிறார். ஆணைக்குழுவும் இதனை கூறியுள்ளது. எனவே, சாராவை கண்டுபிடிப்பது மிக முக்கியமாகும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஈஸ்டர் தாக்குதலின்போது சாரா சாய்ந்தமருதில் இருந்துள்ளார். அங்கு நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பத்தின் பின்னர், சாராவின் குரலை தான் கேட்டதாக சஹ்ரான் மனைவி சாட்சியமளித்துள்ளார். அதேபோல சாராவை தலைமன்னார்வரை கொண்டுசென்ற பொலிஸ் அதிகாரி தற்போது சி.ஐ.டி. காவலின்கீழ் உள்ளார். சாரா உயிருடனேயே இருக்கிறார். உயிரிழந்தவர்களின் உடல் கூற்றுடன் சாராவின் தாய்க்கு நடத்தப்பட்ட டிஎன்ஏ பரிசோதனையில் சாரா உயிரிழந்துவிட்டார் என்பது உறுதியாகவில்லை. ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும் இது பற்றி குறிப்பிடப்படவுள்ளது.

சாரா இந்து மதத்தை சார்ந்தவர். பின்னர்தான் இஸ்லாம் மதத்தை தழுவி தற்கொலை குண்டுதாரி ஒருவரை திருமணம் முடித்துள்ளார். ஆக சாராவை சஹ்ரான் குழுவுக்குள் அனுப்பியது யார்? அவர் மட்டும் எப்படி தப்பித்தார் என்பது உள்ளிட்ட உண்மை கண்டறியப்பட வேண்டும்.

சஹ்ரான் குழுவை யாரோ வழிநடத்தியுள்ளனர். அது உட்பட அனைத்து காரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டால்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும்-என்றார்.

# தமிழ்க் கல்வி அமைச்சை மீண்டும் நாம் பெறுவோம்

## ஜீவன் தொண்டமான் சபதம்

கொழும்பு, ஏப். 04

"ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சை மீள எவ்வாறு பெறுவது என்பது எமக்கு தெரியும். தேர்தலுக்கு பின்னர் அது நடக்கும்." - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு இல்லாது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு அவசியம். அதன் ஊடாக சேவைகள் இடம்பெறுகின்றன. தேர்தலுக்கு பிறகு அதனை பெறுவோம். எவ்வாறு பெறுவது என்பது எமக்கு தெரியும்." - என்றும் ஜீவன் கூறினார்.

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கிடையாவிடின் அடுத்த தேர்தலில் போட்டியிடமாட்டேன்!

## இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த கூறுகிறார்

கொழும்பு, ஏப். 04

"ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளுக்கும் உரிய தண்டனை வழங்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு நீதியை பெற்றுக் கொடுக்காவிட்டால் அடுத்த தேர்தலில் நான் போட்டியிடமாட்டேன். " - என்று இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளுக்கும் தனது பதவிகாலம் முடிவடைவதற்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உரிய தண்டனையை பெற்றுக் கொடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இந்த பொறுப்பில் இருந்து ஜனாதிபதி விலகமாட்டார் என்பதும் எனக்கு தெரியும்.

சிலவேளை, உரிய நடவடிக்கை எடுக்கமுடியாமல்போனால் அடுத்த தேர்தலில் நான் போட்டியிடமாட்டேன். இதனை பொறுப்புடனேயே கூறுகின்றேன். அவ்வாறு கூறுவதற்கான முதுகெலும்பு எனக்கு உள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் மூடிமறைக்கப்பட்டன. ஆனால் குறித்த ஆணைக் குழுவின் அறிக்கையை ஜனாதிபதி வெளிப்படுத்தினார். எனவே, அவர்மீது முழு நம்பிக்கையும் உள்ளது-என்றார்.

# தமிழ் கல்வி அமைச்சு பறிக்கப்பட்டமை மலையக மக்களுக்கு செய்த துரோகம்!

## இராதாகிருஷ்ணன் கண்டனம்

கொழும்பு, ஏப். 04

ஊவா மாகாணத்தில் தமிழ் கல்வி அமைச்சு நீக்கப்பட்டுள்ளமையானது மலையக மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும் - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் கல்வி இரா ஜாங்க அமைச்சருமான இரா தாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கையில் மத்திய மாகாணத்தில் 522 தமிழ்ப் பாடசாலைகளும் ஊவா மாகாணத்தில் 222 தமிழ் பாடசாலைகளும் உள்ளன. இவ்விரு மாகாணங்களிலும் தமிழ்மொழிமூல கல்வி மேம்பாட்டுக்காக தமிழ்க் கல்வி அமைச்சுகள் உருவாக்கப்பட்டிருந்தன. 1988 இல்தான் மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து மலையக மக்களுக்கானதொரு உரிமையாக இவை கிடைக்கப் பெற்றுவந்தன.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இற்றைக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு இல்லாது செய்யப்பட்டது. தற்போது ஊவா மாகாணத்திலும் தமிழ்க் கல்வி அமைச்சும் பறிக்கப்பட்டுள்ளது. இது பெருந்தோட்ட மக்களுக்கு செய்யப்படும் அநீதியாயம். மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்.

தமிழ்க் கல்வி அமைச்சு இருந்தால் கல்விப்பணிப்பாளர் நியமனம், ஆசிரியர் நியமனம், சிற்றுழியர் நியமனம் பல பல விடயங்களை செய்யலாம். தமிழ்மொழிமூல கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம். தற்போது அந்த அமைச்சு இல்லாமல் செய்யப்பட்டமையானது கல்வி வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததி
இணைய திருமண சேவை

+94 777 164 524
www.arunthathee.com

## மணமகன் விபரம்

**17423|வே|1970**
வேலணை|Germany|
170 செ.மீ |இந்து|செ :4
Business | செ.வ் : 04
அவிட்டம் (மகரம்)
Beautiful girl|Divorced

**17856|கு|1976**
வேலணை|இந்து
UK|171 செ.மீ
Software Engineer
பரனி (மேடம்) | Colo-06
Educated &Beautiful girl

**18046 |வே|1979**
வேலணை |இந்து
165 செ.மீ | Uk|Cahier
ரோகிணி (ரிஷபம்)
சூ . செ : 06
UK (PR) Bride

**17444|வே|1980**
மண்டைதீவு |இந்து
178 செ.மீ |Switzerland
Restaurant Staff
பூரம் (சிம்மம்)
Sri Lankan or Foreign

**17883|வே| 1983**
நெடுந்தீவு |இந்து
173 செ.மீ
Business|சுவாதி (துலாம்)
Canada |சூ . செ : 03
Sri Lankan or Foreign

**17989 |வே|1984**
புங்குடுதீவு |இந்து
Chef Assistant|
அத்தம் (கன்னி)
174 செ.மீ| France
Beautiful Girl

**16802| வே|1984**
நெடுந்தீவு | இந்து
Audit Examiner
Sri Lanka |168 செ.மீ
சதயம்(கும்பம்)|Mannar
Educated girl

**17435|வே|1985**
வேலணை |இந்து
Business |கி .பா : 54
அத்தம் (கன்னி) |UK
168 செ.மீ | சூ . செ : 04
UK Girl Only

**18016|வே|1986**
கரம்பொன்|RC
Assistant Manager
Sri Lanka| 168செ.மீ
ரேவதி (மீனம்) |Col-15
Foreign

**17603|வே |1986**
புங்குடுதீவு |இந்து
163 செ.மீ | கி.பா : 35
Staff|France|செவ் :07
ரோகிணி (ரிஷபம்)
Sri Lankan or Foreign

**17312|வே|1986**
காரைநகர்|இந்து
170 செ.மீ Software
Engineer|கி .பா :28
சதயம் (கும்பம்)|செவ்: 02
Educated& Beautifulgirl

**15835|வே|1988**
வேலணை|இந்து
Grama Sevaka
அத்தம் (கன்னி)|கி.பா: 90
182 செ.மீ |செவ் : 08
Government Job

**16508|வே|1993**
காரைநகர்|இந்து
Singaporeர்| Engineer
செவ் : 12|175 செ.மீ
பரணி (மேடம்) | கி. பா :33
Doctor |Colombo -04

**17902|வே|1988**
வேலணை |இந்து
Director|Sri Lanka
மிருகசீரிடம் (ரிஷபம்)
செ : 02 | 172 செ.மீ
Educated girl| கி.பா : 53

**17366|வே|1989**
நாரந்தனை|இந்து
Teacher|Sri Lanka
அத்தம் (கன்னி)
174 செ.மீ
Educated girl

**17024|வே |1989**
அனலைதீவு |இந்து
பூரட்டாதி (கும்பம்) SriLanka
Coordinator|சூ.செவ் :04
158 செ.மீ|Coordinator
Beautiful&Educated girl

**18454|வே|1990**
காரைநகரம்|இந்து
Systerm Engineer 183 செ.மீ
உத்திரட்டாதி (மீனம்)
செ.வ்:01 | Singapore
Degree Holder

**15991|வி|1990**
புங்குடுதீவு|இந்து
167செ.மீ|Hotel Chef
உத்தரம் (கன்னி)| France
Beautiful girl | கி.பா : 40

**18205|ந|1991**
புங்குடுதீவு|RC
Accountant|SriLanka
179செ.மீ | செவ் : 04
ஆய்யிலியம் (கடகம்)|
Degree Holder

**17974|வே|1991**
சுருவில்|இந்து
Director|Sri Lanka
புனர்பூசம் (கடகம்)
175 செ.மீ |சூ .செ 05
Colombo -03
Degree Holder

**15832| வே |1991**
புங்குடுதீவு|இந்து
France| 170 செ.மீ
Business
கேட்டை (விருச்சிகம்)
Government Job or
abroad|Colombo -13

**16370|வே|1992**
காரைநகர்|இந்து
Sri Lanka|178 செ.மீ
Lecturer |செவ் : 02
ரேவதி (மீனம்) |Col-06
Degree Holder

**17582|வே|1992**
காரைநகர்|இந்து
Senior Software
Engineer|Singapore
165 செ.மீ |செவ் : 12
Moratuwa| கி.பா : 33
உத்திரட்டாதி (மீனம்)

**16261| வே | 1996**
நயினாதீவு| இந்து
SriLan lanka |177செ.மீ
IT Netwaork Assistant
கேட்டை(விருச்சிகம்)
Foreign Only
சூ . செ : 11| Wattala

## மணமகள் விபரம்

**17630|வே|1979**
காரைநகர் | இந்து
Computer Typist
பூராடம் (தனுசு)
Sri Lanka
165 செ.மீ | Divorced

**17192|வே| 1984**
காரைநகர்|இந்து
Sri Lanka |158 செ.மீ
Specialist- people
Experience|பூசகம்(கடகம்)
Colombo -06| கி.பா: 35

**15032|வே |1988**
வேலணை |இந்து
திருவோணம் (மகரம்)
Sri Lanka |Post Master
166 செ.மீ |Foreign or Sri
Lankan with good job

**14697|வே|1990**
ஊர்காவற்துறை|இந்து
|155 செ.மீ|பூராடம்(தனுசு)
SriLanka|Assistant
Accountant|கி.பா : 23
Colombo,UK,Canada

**16580|வே|1989**
காரைநகர்|இந்து
Science Teacher
மகம் (சிம்மம்)
Sri Lanka |169செ.மீ
Teacher

**15020|வே|1990**
காரைநகர்|இந்து
Civil Engineer
கேட்டை (விருச்சிகம்)
158செ.மீ|கி .பா: 17
Engineer or Doctor

**18148|வே|1990**
நெடுந்திவு | இந்து
Sri Lanka|
மகம் (சிம்மம்)
162 செ.மீ | செவ்: 01
Good Job

**15005| கே|1991**
சரவணை|இந்து
Teacher | Sri Lanka
பரணி (மேடம்) | 156செ.மீ
செ வ் : 08
Degree Holder

**14757|வே|1991**
காரைநகர்|இந்து
Office Clark
மூலம் (தனுசு)
செ.மீ |Sri Lanka
Good Job

**16514|கு| 1991**
வேலணை|இந்து
SriLanka | செ வ் :4
Development Officer
அஸ்வினி (மேடம்)
154செ.மீ |Gov Job

**17144|வே |1991**
காரைநகர்|இந்து |செ : 01
Doctor|156 செ.மீ
பூரட்டாதி (கும்பம்)
Sri Lanka|Colombo -06
Engineer or Doctor

**15320|வே |1991**
வேலணை|இந்து
158செ.மீ
சுவாதி (துலாம்)
வவுனியா
Good job

**17600| வே|2000**
புங்குடுதீவு|இந்து
அஸ்வினி (மேடம்)
149செ.மீ | செ வ் : 12
Good Jobt |வவுனியா

**17621|வே|1996**
கரம்பொன்|இந்து
Sri Lanka|Software
Engineer |165 செ.மீ
ரேவதி (மீனம்) |கி .பா:24
Doctor, Engineer|Col-06

**18157| வே|1994**
காரைநகர்|இந்து
Executive Officer
அஸ்வினி (மேடம்)
165 செ.மீ| சூ.செ :01
Degree Holder|Col-06

**13303|வே|1994**
வேலணை|இந்து
Srilanka|கி.பா :46
155 செ.மீ |சூ .செ :01
அவிட்டம் (மகரம்)
Foreign or Sri Lanka

**15670|வே|1993**
வேலணை |Srilanka
150செ.மீ | செவ் : 12
Divorced
கேட்டை (விருச்சிகம்)
Only foreign

**15335|வே|1993**
வேலணை |இந்து
Sri Lanka |163செ.மீ
Flow Coordinator
கார்திகை (ரிஷபம்)
Only Sri Lanka

**14944|வே|1992**
நயினா தீவு |இந்து
Sri Lanka|Student
சித்திரை (கன்னி)
152செ.மீ| செவ் : 01
Educated

**17944| வே|1992**
புங்குடுதீவு | 154செ.மீ
Sri Lanka|Development
Officer|அஸ்வினி (மேடம்)
Trincomalee|கி.பா26
DdegreeHolder

**17914|வே|1993**
காரைநகர்|இந்து
Srilanka|EngilshTeacher
150 செ.மீ |செவ் : 01
கார்திகை (ரிஷபம்)
Foreign or காரைநகர்

**17636|வே|1992**
பூங்குடுதீவு |இந்து
UK| Trainee Solicitor
செ.மீ 155
மூலம் (தனுசு)
Degree Holder

**15179|வே|1992**
காரைநகர் |Sri Lanka
Tax Associate|கி.பா:35
செ:12|160செ.மீ|Col
திருவாதிரை(மிதுனம்)
Foreignor காரைநகர்

**16243|வே|1994**
காரைநகர் |இந்து |செ:08
Development Officer
155செ.மீ|Trincomalee
பூரம் (சிம்மம்)|கி.பா :24
Bank Manager





தற்பொழுது விற்பனையில்
அரச, தனியார் தொழில் புரியும் உள்நாட்டு ,
வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 22

இணையத்தில் வாசிக்க
www.rebrand.ly/i22

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு
(Profile No) இலக்கத்தை Whatsapp
94777164524 இற்கு அனுப்பி குறித்த
வரனின் முழுமையான விபரத்தை
பெற்றுக்கொள்ள முடியும்.

20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் | 18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆசிய நாடுகளின் நிலைப்பாடு இலங்கையை பாதுகாக்குமா?

வேல்ஸில் இருந்து அருஸ்

இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட ஏழாவது தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த தீர்மானம் என்பது தமிழ் அமைப்புக்களின் அல்லது அரசியல் கட்சிகளின் உழைப்பினால் கொண்டுவரப்பட்டது அல்ல. இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பூகோள அரசியல் நெருக்கடியின் எதிர்விளைவு இது. நாம் முயன்றாலும், இல்லை என்றாலும் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கும்.

ஏனெனில் இந்த தீர்மானத்தில் தமிழ் அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் முன்வைத்த எந்த கோரிக்கைகளும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. மாறாக மேற்குலகத்தின் அழுத்தம் இந்தியாவின் அரசியல் தீர்வு என்பவற்றை உள்ளடக்கியதாகவே இந்த தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் என்பது இலங்கையில் உள்நுழைவதற்கான பாதை ஒன்றை மேற்குலகத்திற்கு திறந்து விட்டுள்ளது. அதாவது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களை சேகரிக்க அல்லது சாட்சியங்களை பாதுகாக்க ஐ.நா இலங்கைக்குள் நுழைய முடியும்.

மாறாக இணைக்குழு நாடுகளான பிரித்தானியாவோ, கனடாவோ அல்லது ஜேர்மனியோ அங்கு சாட்சியங்களை சேகரிப்பது என்ற போர்வையில் செல்லமுடியுமா என்பதே தற்போது இலங்கையை அச்சுறுத்தும் கேள்வியாகும். அவ்வாறு நிகழுமானால் அது இலங்கை இதுவரை கட்டிக்காத்த இறைமை என்ற பதத்தை உடைத்துவிடும் என்பதே இலங்கை அரசுக்கு முன்னுள்ள பாரிய நெருக்கடி.

அதேசமயம், இவ்வாறான ஒரு நிலை உருவாகுவதற்கு இந்தியா, சீனா, பாகிஸ்தான் மற்றும் ரஸ்யா போன்ற நாடுகள் அனுமதிக்குமா என்பதே தற்போதைய கேள்வி. ஏனெனில் இலங்கையில் ஆரம்பமாகும் இந்த அவதானிப்பு தங்கள் நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் தொடரலாம் என்பதே இந்த நாடுகளின் அச்சம்.

உதாரணமாக காஸ்மீர் பிரச்சனை தொடர்பில் இந்தியா அச்சமடைகின்றது. அது தொடர்பில் ஐ.நா கவலை வெளியிட்டு வந்ததும், அமெரிக்காவின் புதிய அரச தலைவர் தனது நிலையை மாற்றாததும் நாம் அறிந்ததே.

எனவே தான் தமிழ் மக்களின் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்க முற்பட்டு நிற்கின்றது இந்தியா. இலங்கையில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினை தான் பின்னர் மனித உரிமை விவகாரமாக மாற்றம் பெற்றது. எனவே அரசியல் தீர்வும், சுயாட்சியும் தான் தமிழ் மக்களின் இறுதி இலக்கு. அதனை நாம் அறிவோம்.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையில், இதனை மனித உரிமை பிரச்சினையாக மாற்றி தனது பிராந்தியத்தில் மேற்குலகத்தின் தலையீடுகளை விரும்பவில்லை, எனவே தான் 13 ஆவது திருத்தச்சட்டம், அரசியல் தீர்வு போன்ற பதங்களும், குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணசபை என்ற பதமும் இந்த தீர்மானத்தில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.




**“இந்தியாவைப் பொறுத்த வரையில், இதனை மனித உரிமை பிரச்சினையாக மாற்றி தனது பிராந்தியத்தில் மேற்கு லகத்தின் தலையீடுகளை விரும்பவில்லை, எனவே தான் 13 ஆவது திருத்தச் சட்டம், அர சியல் தீர்வு போன்ற பதங்களும், குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாண சபை என்ற பதமும் இந்த தீர் மானத்தில் முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது.”**

இந்தியாவின் முன்னாள் பிரதமர் காலம்சென்ற இந்திரா காந்தி அம்மையாரின் காலத்திலும் அவர் போராளி இயக்கங்களுக்கு பயிற்சி கொடுத்து அரசியல் பிரச்சினைக்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தார். இனக்கலவரங்களில் கொல்லப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கான நீதியை நிலைநாட்ட பிராந்திய வல்லரசு அன்றும் விரும்பவில்லை.

அதாவது இந்த தீர்மானத்தில் இந்தியாவும், மேற்குலகமும் தமக்கான நன்மைகளை தேடிக்கொண்டுள்ளன. அதேசமயம் அதில் தொடர்புடைய இலங்கை மற்றும் தமிழர்களின் நிலை என்ன?

இலங்கை அரசும் தீர்மானம் வெற்றி என கூறுவதுடன் அதனை நிராகரித்தும் உள்ளது.

அது வெற்றி என கூறுவதற்கான காரணம், தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கிய 40 நாடுகளில் ஒரு ஆசிய நாடும் இல்லை என்பதுடன், இந்தியாவும் அதனை ஆதரிக்கவில்லை என்பது தான். அதனை தான் இலங்கை அமைச்சர் ஜி.எல். பிரீஸ் தெரிவித்திருந்தார். ஆசிய நாடுகளின் இந்த ஒற்றுமை என்பது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை அல்லது மேற்குலகத்தின் நகர்வுகளை கட்டுப்படுத்தும் தகமை கொண்டது என்பதை நாம் மறந்துவிடலாகாது. எனவே தான் இலங்கை நிம்மதி கொண்டுள்ளது.

ஆசியா நாடுகளின் இந்த முடிவு தமிழ் மக்கள் சந்தித்த மிகப்பெரும் தோல்வியாகும், தமிழ் இனம் தன்னை சூழவுள்ள பிராந்தியத்தில் தனக்கான நண்பர்களை தேடிக்கொள்வதில் தவறிழைத்துள்ளதையே இது காட்டுகின்றது. இந்த பின்னடைவு என்பது அவர்களுக்கான சுயாட்சி மற்றும் இறைமை தொடர்பில் அதிக பாதிப்புக்களை வருங்காலத்தில் ஏற்படுத்தும்.

போர் உக்கிரமாக இடம்பெற்ற காலப்பகுதியில் அதனை நிறுத்துமாறு கோரி பிரித்தானியாவின் நாடாளுமன்றத்திற்கு முன் இலட்சக் கணக்கில் தமிழ் மக்கள் போராடிய போதும், அவர்களை அழைத்து பிரித்தானியா தெரிவித்த கருத்து என்பது இங்கு போராடுவதில் அர்த்தமில்லை, உங்கள் பிராந்தியத்தில் உள்ள பிராந்திய வல்லரசுகளை மீறி எம்மால் ஒன்றும் செய்ய முடியாது எனவே அவர்களுடன் பேசுங்கள் என்பதேயாகும்.

அதேபோலவே போரின் இறுதி நாட்களில் கொழும்புக்கு பயணம் மேற்கொண்ட பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களான டேவிட் மில்லிபான்ட மற்றும் பேர்னாட் குச்சுனர் ஆகியோரால் கூட போரை நிறுத்த முடியவில்லை.

அதாவது தமிழ் இனத்தை பொறுத்தவரையில் மேற்குலகம், இந்தியா என்ற அதன் இறுக்கமான பார்வையை சற்று தளர்த்தி உலக நாடுகள் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளை நோக்கி தமது நகர்வை மேற்கொள்ள வேண்டும்.

திறக்காத கதவை தொடர்ந்து தட்டுவதில் பயனில்லை என்பதை நாம் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த தீர்மானத்தில் பல தரப்பும் தமக்கான அனுகூலங்களை கண்டறிந்துள்ளன. அப்படியானால் தமிழ் இனம் இதனை பயன்படுத்தி நன்மைகளை பெறமுடியுமா?

தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியங்களை சேகரித்தல், ஆவணப்படுத்துதல், அரசியல் தீர்வு, இராணுவ மயமாக்கல், சிறுபான்மை இனங்கள் மீதான அச்சுறுத்தல்கள் போன்ற விடயங்களை தொளிவாக ஆய்வு செய்து அதனை வலுப்படுத்தி அதனை பலப்படுத்துவது தொடர்பில் நாம் சிந்திக்க முடியும்.

தற்போது திறந்துள்ள இந்த பாதைகளை வலுப்படுத்த வேண்டுமானால், தமிழ் இனம் ஒரு அணியில் இணைய வேண்டும் என்பதுடன், தமிழர் தாயகம் அமைந்துள்ள பிராந்தியத்தில் உள்ள பிராந்திய வல்லரசுகள் மற்றும் பொருளாதாரத்தில் வளர்ந்துவரும் நாடுகளுடன் தமது உறவுகளை தமிழர் தரப்பு வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இல்லையேல் தற்போது திறந்துள்ள இந்த கதவுகளும், மேற்குலகத்தினதும், இந்தியாவினதும் தேவைகள் தீர்ந்ததும் மீண்டும் இறுக்கமாக மூடப்படும் என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**32-B**


**2014 5**

A யிலிருந்து B யை அடைவதற்கு இதுவே கிட்டியதூரம்











(2)

**2014 28** எனவே சரியான விடை 2





இதன் பிரகாரம்




இதன் பெறுமானம் 6 ஆக இருக்க வேண்டும். எனவே சரியான விடை 2

**2014 29**





x 3= 54 ஆயிருக்க வேண்டும்
எனவே சரியான விடை 2

**2015 11**




என்ற கோலத்திற்கேற்ப என்ற கோலத்தும் பொருத்தமான A மற்றும் B என்பவற்றின் பெறுமானங்கள் 3 4 ஆகும்.
எனவே சரியான விடை 3

**2015 21**



(1)

தோற்ற ஆழம் மெய் ஆழம் தொடர்பிலான வினா இதுவாகும். இதில் கவனிக்க வேண்டிய விடயம் பொருள் குறைவான ஆழத்தில் நீர் மட்டத்திற்கு கீழாகவும் பொருளுக்கு மேலாக இருப்பதோடு ஒரே நேர்கோட்டிலும் அமையும். எனவே சரியான விடை 1

பெற்றோர்களே :
எவ்வளவு தூரம் ஆண்டு 5 ற்குரிய பாடங்களை பிள்ளைகளுக்கு படிப்பித்து அவர்களின் மனச்சுமையை ஏற்றாது எமது வழியில் பயிற்சியைக் கொடுங்கள். அதன் பின் புதிய வினாத்தாள் I 45 நிமிடம் உட்படுத்துவதன் மூலம் வெற்றிக் கனியை தட்டிப்பறிக்கலாகம்.
இங்கு பத்து தலைப்புகளின் கீழ் வினாவிடைத் தொகுப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
வினாக்களை முதலில் பிள்ளைக்கு செய்யக் கொடுத்து மறுநாள் விடைகளை நாம் தரும் விளக்கத்துடன் எடுத்துச் செல்லுங்கள் இமாலைய சாதனை படைக்கலாம்.
இத்துடன் **Perception** புலக்காட்சியை விளங்கிக்கொள்ளுதல் நிறைவுக்கு வர இருக்கின்றது. இதன் பின்னர் இரண்டாவது தலைப்பான பிரச்சினை தீர்த்தல் **Problem solving** தொடர இருக்கின்றது.

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# புத்தாண்டை கொட்டாடாதீர்கள் என்று அரசாங்கம் ஒருபோதும் கூறவில்லை

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*



**கொழும்பு, ஏப்.04**

**தமிழ் - சிங்களப் புத்தாண்டைக் கொண்டாட வேண்டாம் என்று அரசாங்கம் ஒருபோதும் கூறவில்லை என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

எனினும் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய கட்டுப்பாடுகளுடன் புத்தாண்டைக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக குடும்ப அங்கத்தவர்களுடன் மாத்திரம் இணைந்து புத்தாண்டைக் கொண்டாடுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

இதேவேளை, தற்போது நாட்டில் காணப்படுகின்ற கொரோனா தொற்று அச்ச நிலைமைகளை மதிப்பீடு செய்து, புத்தாண்டில் முன்னெடுக்கப்படக்கூடிய நடைமுறைகள் குறித்து சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# ஈழத் தமிழருக்கு எதிராக காங்கிரஸ் செயல்பட்டது

*மறுக்கவில்லை என்கிறார் வைகோ*

சென்னை,ஏப்.04

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக காங்கிரஸ் செயல்பட்டதை மறுக்கவில்லை என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை மத்திய பா.ஜ.க. அரசு புறக்கணித்ததை தமிழர்களுக்குச்செய்யப்பட்ட பச்சைத் துரோகம் எனக் குற்றம் சாட்டிய நிலையில், முள்ளிவாய்க்கால் படுகொலைக்குக் காரணமான கட்சி எனக் கூறப்படும் காங்கிரஸுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்கிறீர்களே? எனக் கேள்வியெழுப்பப்பட்டது.



இதற்குப் பதிலளித்த வைகோ, தேர்தல் கூட்டணி எனும்போது எல்லாக் கொள்கையிலும் ஒன்றாக இருக்க முடியாது என்றும் 1967இல் ராஜாஜி தி.மு.கவுடன் கூட்டணி வைத்தார்.

இதன்போது தி.மு.கவின் அத்தனை கொள்கையையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் இலங்கைத் தமிழர்களுக்கு காங்கிரஸ் விரோதமாகச் செயல்பட்டது என்பதை தற்போதும் மறுக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் குறித்து காங்கிரஸ் எந்தக் கருத்தும் வெளியிடவில்லை என்பதும் உண்மையே என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் பெயரை நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் பயன்படுத்துவதைப்போல, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் எம்.ஜி.ஆர். பெயரைப் பயன்படுத்துவதை எப்படிப் பார்க்கின்றீர்கள் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் கூற விரும்பவில்லை என வைகோ தெரிவித்துள்ளார். (எ)

# 17 கிலோ

## தங்கக் கட்டிகளுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.04

17 கிலோ கிராம் நிறையுடைய தங்கக் கட்டிகளுடன் கட்டுநாயக்கா விமான நிலைய சுங்கப்பிரிவினரால் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் பெறுமதி சுமார் 220 மில்லியன் ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## புதையல் அகழ்வு: ஐவர் சிக்கினர்!

திருகோணமலை, ஏப்.04

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வில்கம் விகாரை காட்டுப்பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் ஐவர் நேற்று முன்தினம் நள்ளிரவு கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை வில்கம் விகாரை காட்டுப்பகுதியில் புதையல் தோண்டுவதாக விஷேட பொலிஸ் அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து அலவாங்கு, மண்வெட்டி போன்றவற்றுடன் ஐவரைக் கைது செய்தனர் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பிரதேச செயலர் அலுவலங்களுக்கு பட்டதாரி அபிவிருத்தி அதிகாரிகள்

கொழும்பு, ஏப்.04

சுற்றாடலை பாதுகாப்பதற்காக பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு, 350 பட்டதாரி அபிவிருத்தி அதிகாரிகளை இணைத்துக் கொள்ளவுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது..

இந்த அபிவிருத்தி அதிகாரிகள் நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர் அலுவலங்கள் மற்றும் மாவட்டச் செயலாளர் அலுவலகங்களில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான முதலாவது குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டோருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

சுற்றாடல் அமைச்சில் இது தொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர் விஷேட வைத்தியர் அனில் ஜயசிங்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த*

# அமைச்சரவை துணைக்குழு அறிக்கை ஜனாதிபதியிடம் நாளை கையளிப்பு



**கம்பஹா, ஏப்.04**

**2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட அமைச்சரவை துணைக்குழுவின் அறிக்கை நாளை திங்கள்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.**

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் அவர்கள் முன்வைத்த பரிந்துரைகளை ஆய்வு செய்ய பெப்ரவரி 19ஆம் திகதி அமைச்சரவை துணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்நிலையில், கம்பஹாவில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இந்த அறிக்கை நாளை திங்களன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அவரால் பகிரங்கப்படுத்தப்படும் - என்றார்.

மேலும் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்வதை அரசாங்கம் உறுதி செய்யும் என்றும் கடந்த அரசாங்கத்தின் அலட்சியம் மற்றும் பொறுப்பேற்கத் தவறியமை நாட்டின் பொருளாதாரத்தையும் பாதித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (எ)

# புதையல் தோண்ட முயற்சித்த குற்றச்சாட்டில் இருவர் கைது!

*தர்மபுரம் பகுதியில் சம்பவம்*



தர்மபுரம், ஏப்.04

தர்மபுரம் பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏற்கனவே வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் இவ்வாறு புதையல் தோண்ட முயற்சித்த சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அதே பகுதியில் புதைய தோண்ட முயற்சித்ததாக தெரிவித்து நேற்றுமுன்தினம் இரவு இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் இருவர் கைது செய்யப்பட்டு தர்மபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சந்தேகத்துக்கிடமான தொழில்நுட்ப உபகரணங்களும் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர்களில் ஒருவர் வவுனியா பகுதியைச் சேர்ந்தவர் எனவும், மற்றவர் அம்பாறை பொத்துவில் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, மற்றுமொரு சந்தேக நபர் தப்பியோடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் முன்னெடுத்த வருகின்றனர். (எ)

# ஈஸ்டர் தின வழிபாடுகளில் அச்சமின்றி கிறிஸ்தவர்கள் கலந்துகொள்ள முடியும்!

*அரசாங்கம் உத்தரவாதம்*

கொழும்பு, ஏப்.04

இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்கள் அச்சமின்றி ஈஸ்டர் தின வழிபாடுகளில் கலந்துகொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டின் சகல பகுதிகளிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு விஷேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறித்து விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு ஆலோசனை வழங்கப்படவில்லை என்றும் அது சிரமமான விடயம் என்றும் இராணுவத்தளபதி குறிப்பிட்டார்.

எனினும், தேவைக்கேற்ப பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதால் மக்கள் அச்சமின்றி ஈஸ்டர் தின வழிபாடுகளில் கலந்துகொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

*400 மாணவர்களுடன்*

# யாழ். பல்கலை. வவுனியா வளாகத்தின் மாணவர் விடுதி தற்காலிகமாக முடக்கம்

வவுனியா, ஏப்.04

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் பெண்கள் விடுதி தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

வவுனியா வளாகத்தில் கல்வி கற்கும் கண்டியைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு கொரோனாத் தொற்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உறுதி செய்யப்பட்டிருந்தது.

விடுமுறையில் சென்ற அவர் மீண்டும் பல்கலைக்கழகம் திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலிற்குள்ளாக்கப்பட்டிருந்தார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த மாணவி கிளிநொச்சி கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியின் ஒருபகுதி சுமார் 400 மாணவர்களுடன் நேற்றுச் சனிக்கிழமை முதல் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து வெளிச்செல்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை அவர்களுக்கு கட்டம், கட்டமாக பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

# உலக நீதி அரங்கில், தமிழர்களின் முதல் சாட்சி இராயப்பு ஆண்டகை!

*அனுதாபச் செய்தியில் மனோ கணேசன் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.04

"உலக நீதிமன்றத்தில், இலங்கை வாழ் தமிழர்களின் முதல் வழக்கு தொடருநரும், முதல் சாட்சியும் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள்தான். ஆனால், அவர் தொடர்ந்த வழக்கு இன்னமும் முடிவுறவில்லை. அதற்குள் ஏன் போனார் என்றும் தெரியவில்லை" என த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள அனுதாப செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது,.

2005 முதல் 2009 வரையிலான மிக நெருக்கடியான மனித உரிமை பாழ்பட்டு போன கால கட்டத்தில் அவர் எனக்கும், எமது சிவில் மக்கள் கண்காணிப்பு குழுவுக்கும் தந்த உபதேசங்கள் என் மனதுள் இன்றுவரை ஆளப்பதிந்துள்ளன. தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி, மக்கள் கண்காணிப்பு குழு ஆகிய அமைப்புகளின் சார்பில் எங்கள் அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கிறேன்

ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களது நேர்மையும், ஆளுமையும், துணிச்சலும் பல சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டுள்ளன. போரின் இறுதி கட்டங்களில் கொல்லப்பட்டோர், காணாமல் போனோர், காயமடைந்தோர் பற்றிய கணக்கீடுகள் தொடர்பில் சர்வதேச சமூகமும், குறிப்பாக ஐநா அமைப்புகளும், ஏனைய சிவில் அமைப்புகளும், இலங்கை அரசும் இழுபறிபட்டுக் கொண்டு இருந்த வேளையில், ஆயரின் குரல் உறுதியாகவும், தர்க்கரீதியாகவும் ஒலித்தது.

அவரது குரலுக்கும், தர்க்க ரீதியான ஆவணங்களுக்கும் இறுதிவரை இலங்கை அரசும், ஐநாவும் பதில் கூறவில்லை என்பதை இங்கே கூறியே ஆக வேண்டும். அது மட்டுமல்ல, போரின் இறுதி காலகட்டங்களில் ஐ.நா. சபை அப்பாவி மக்களை பாதுகாக்க தவறி விட்டது என்ற மனக்கிலேசதத்தையும் அவர் கொண்டிருந்தார்.

நியாயம், நீதி, உண்மை, அமைதி, சமத்துவம், சமாதனம் ஆகியவற்றின் பேரில் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் நடத்தி வந்த போராட்டம் இன்னமும் நிறைவடையவில்லை. உலகின் மனசாட்சியை தட்டி எழுப்பி அவர் தொடுத்த வழக்கு இன்னமும் முடிவுறவில்லை. அங்கே அவர் நேர்பட அளித்த சாட்சியத்துக்கு பதிலுரை வழங்கப்பட வில்லை. அதற்குள் ஆயர் ஐயா, ஏன் போனார் எனவும் தெரியவில்லை.

ஆனால், அவரது சிவில் தலைமைத்துவத்தை முன்மாதிரியாக கொண்டு இன்று வடக்கு கிழக்கிலேயே சிவில் சமூகம் கட்டமைக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்துள்ளமை நம்பிக்கை ஒளியை தருகிறது. இதுவே அவருக்கான அர்த்தமுள்ள அஞ்சலி என நான் நினைக்கின்றேன்.

# எண்ணெய் விவகாரம் பொய் என்றால் பின்னணி சக்திகள் குறித்து விசாரணை

*அமைச்சர் நாமல் எச்சரிக்கை*



கொழும்பு, ஏப்.04

புற்றுநோய் ஏற்படுத்தக் கூடிய தேங்காய் எண்ணெய் விவகாரம் பொய் என்றால், அதன் பின்னணியிலுள்ள சக்திகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நாமல் மேலும் தெரிவித்தவை வருமாறு: புற்றுநோய் ஏற்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட விடயம் தொடர்பில் அரசாங்கம் விசாரணையை நடத்தி வருகிறது. இதற்கமைய இந்த விடயத்தின் பின்னணியில் உள்ள உண்மை, சமூகத்துக்கு வெளிப்படுத்தப்படும்.

குறித்த எண்ணெய் விவகாரம் பொய் என்றால், அத்தகைய பொய்களை சமூகமயமாக்குவதற்கு பின்னால் யார் இருக்கிறார்கள் அல்லது இந்த தேங்காய் எண்ணெய்க்கு எதிராக வேறு எந்த சக்தியும் இருக்கிறதா? என்பது தொடர்பில் ஆராயப்படும்.

ஏனென்றால், ஒவ்வொரு நாடுகளிலும் இதுபோன்ற உள்ளூர் உற்பத்தியை நிறுத்த வெளிநாட்டு நிறுவனங்கள் கூட நடவடிக்கை எடுத்துள்ளன என்பது எங்களுக்குத் தெரியும்.

ஆகவே, இன்று நாம் உள்ளூர் உற்பத்தியை வலுப்படுத்த முயற்சிக்கும் ஒரு நேரத்தில், இதுபோன்ற ஒரு சக்தி இதற்குள் செயல்படுகிறதா என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

மேலும் அரசாங்கமாக எங்கள் கொள்கைகள் தெளிவாகவுள்ளன. எண்ணெய் விவகாரம் பொய்யாக இருந்தால், அந்தப் பொய்யை பரப்புவதற்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தப்படும்- என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# பொதுப் பிரச்னைக்கு எதிராக ஒன்றிணைந்து தமிழ் எம்.பிக்கள் குரல் கொடுக்க வேண்டும்!

*சாணக்கியன் வலியுறுத்து*

மட்டக்களப்பு, ஏப்.04

மட்டக்களப்பில் நான்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றோம். இந்த மாவட்டத்தில் இருக்கும் பொதுவான பிரச்னைகளுக்கு நாங்கள் ஒன்றாகக் குரல் கொடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெவிலியாமடு பிரதேசத்தில் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையில் மரமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படுவது குறித்து ஆராய களவிஜயம் மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்தாண்டும் கலையுறவு

இலங்கையின் வடமாகாணத்தில் தான் வசித்துவரும் யாழ்ப்பாணத்திலிருந்து பயணிப்பதற்கான தடைகளை இப்பெருந்தொற்று நோய் ஏற்படுத்தியிருக்கும் நிலையில் கடந்த வருடம் இந்தியாவில் நடை பெற விருந்த பெருமளவான கச்சேரிகளை ரத்து செய்ய வேண்டிய நிலையினை யாழ்ப்பாணம் பி.எஸ்.பாலமுருகன் எதிர் கொண்டிருந்தார்.



"பல்வேறு இணைய ரீதியிலான நிகழ்வுகளில் பங்கு பற்றியிருந்தேன். அத்துடன் பல்வேறு ரெக்கோடிங்களையும் இங்கு மேற்கொண்டு அங்குள்ள ஏற்பாட்டாளர்களுடன் அதனை பகிர்ந்து கொண்டாலும் அவாநிறைந்த சபையோர் முன்னிலையில் நேரடியாக இசைக்கச்சேரிகளை நடத்துவதற்கு ஈடானதாக எதுவும் அமையப்போவதில்லை" என்று மிகவும் உறுதியாகப் பெருகிவரும் ரசிகர் கூட்டத்தினை தென்னிந்தியாவில் கொண்டிருக்கும் நாகஸ்வர கலைஞரான பாலமுருகன் கூறுகிறார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் சென்னையில் நடைபெற்ற இசை நிகழ்வொன்றில் அவர் இசைத்த சாருகேஷியை ரசித்தவர்கள் அந்த ஆற்றுகையினை மறந்துவிடவில்லை என்பதுடன் அவரை நினைவூட்டாமல் இன்னொரு சாருகேஷியினை அதற்குப் பின்னர் அவர்கள் மெச்சியிருக்கவும் இல்லை. காற்று வாத்தியமான அவரது கருவியிலிருந்து பிறக்கும் கம்பீரமான அந்தநாதம் நீண்டு தரித்தும் முழுமையான மூச்சுடனும் உயிரோட்டம் மற்றும் உணர்வுடனும் வழிந்தோடி இரசிகர்களை வசியப்படுத்துகிறது.

அவரைப்போன்ற இலங்கை கலைஞர்களுக்கு இந்தியாவில் ஆற்றுகையினை நிகழ்த்துவது வெளிநாடுகளுக்கு செல்லும் வழமையான சிக்கல்களுக்கு அறைகூவல் விடுப்பதாகவே அமைகின்றது. ஒப்பீட்டளவில் நட்பு நாடாக இருந்தாலும் விசாபெற்றுச்செல்ல வேண்டிய இப்பிராந்தியம், பல்வேறு விமான சேவை தெரிவுகளை கொண்டிருக்கும் அதேவேளை கொழும்புக்கும் சென்னைக்கும் இடையிலான விமானப் பயணம் ஒரு மணித்தியாலத்துக்கு குறைவான நேரத்தை எடுப்பதுடன், *2019 யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இலகுவான பயணத்தை மேற்கொள்வதற்கு வழிவகுக்கின்றது.*

"அங்கு சென்று இசை நிகழ்வுகளை நடத்துவதற்காக எல்லைகள் திறக்கும் வரையிலும் என்னால் காத்திருக்க முடியாது", என பாலமுருகன் குறிப்பிடுகிறார்.

கண்டிய நடன நிபுணரும் குருவுமான உபேகா சித்திரசேனா உலகளாவிய ரீதியில் ஆற்றுகைகளை நடத்தியிருந்தாலும் குறிப்பாக சென்னை உட்பட இந்தியாவில் உள்ள ரசிகர்கள் சற்று வேறுபட்டவர்கள் என கூறுகிறார். "நிகழ்வு முழுவதும் அமர்ந்திருக்கும் வரிசைவரிசையாக காணப்படும் வயதானவர்கள் மற்றும் சிறுவர்கள் இந்த நிகழ்வுகளில் தமக்குப் பிடித்த தருணங்களை அகத்துரண்டுதலால் மெச்சுகின்றனர். அவ்வாறான ஈடுபாட்டையும் உணர்வினையும் காண்பது மிகவும் அரிதானதாகும்."

**நிருத்யாக்ரமுடனான ஒன்றிணைவு**

இலங்கையின் மிகப்பிரபலமான கண்டிய நடன நிபுணரான உபேகாவின் தந்தைக்குப் பின்னர் பெயரிடப்பட்ட கொழும்பை தளமாகக் கொண்டியங்கும் சித்ரசேன நடன நிறுவனத்தைச் சேர்ந்த கலைஞர்களும் நிருத்யாக்ரம் குழுவினரும் கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாக ஒன்றிணைந்து ஆற்றுகைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

சம்ஹாரா (2012) மற்றும் ஆஹூதி (2019) ஆகிய இரண்டு தயாரிப்புக்களும் இருவேறு பாரம்பரியங்களை கொண்ட கண்டிய மற்றும் ஒடிசி வடிவங்களை ஒன்றிணைத்த ஆற்றுகைகளாக இருந்தது. இப்பெருந்தொற்றுநோய் காரணமாக இரண்டு குழுவினரும் கடந்த



வருடம் கூட்டு ஆற்றுகைகளை அரங்கேற்றத் தவறியுள்ளனர். ஆனாலும் சகல வழிகளிலும் அவர்கள் தொடர்பினை பேணி வருகின்றனர். தொழில் ரீதியானதும் கலை ரீதியானதுமான அவர்களின் நீண்ட ஒன்றிணைவானது சித்ரசேனாவுக்கும் நிருத்யாக்ரம் கலைத்துறை பணிப்பாளரும் ஒடிசி நிபுணருமான சுரூபா சென் இடையிலான நட்புறவினைப்போன்ற விலை மதிக்க முடியாத நட்பினை உருவாக்கியுள்ளது. இரு தரப்பிலிருந்தும் பாக்கு நீரிணைக்கு மேலாக மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட அல்லது முன்கூட்டியே திட்டமிடாத பயணங்கள் இந்த உறவினை மேலும் வலுப்படுத்தியுள்ளன.

ஆஹூதி நிகழ்வுக்காக இரண்டு நடன பள்ளிகளினதும் கலைஞர்கள் 2019 இல் பெங்களூருவில் ஒத்திகையை மேற்கொண்டிருந்தனர். மறுநாள் குரு பூர்ணிமா நிகழ்வுக்காக உபேகா சித்ர சேனாவை அழைப்பது எவ்வளவு பொருத்தமானதாக இருக்குமென சித்திர சேனாவின் கலைத்துறைப் பணிப்பாளர் ஹேஷ்மா விக்னராஜாவிடமும் தலைமை நடனக்கலைஞர் தாஜி டயஸ் ( இருவரும் சித்ரசேனாவின் மருமகள்மார்) அவர்களிடமும் சுரூபா சென் சாதாரணமாக கூறினார். " இவ்விடயம் தொடர்பாக ஒரு சனிக்கிழமை மாலை நான் எனது மருமகள்மாரிடமிருந்து தொலைபேசி அழைப்பினை பெற்றிருந்தேன். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் சுரூபாவிற்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் அவரது வாசல்படிகளில் நின்றிருந்தேன். அந்த சந்தர்ப்பத்தில் என்னை கண்டதும் அவரிடம் தோன்றிய உணர்ச்சி வெளிப்பாட்டினை நான் இன்னும் மறக்கவில்லை." சித்ரசேனா கூறுகிறார். மேலும் " இதனைப்போன்ற பல விடயங்கள். குறிப்பிடத்தக்க ஒத்திகைகள், ஆற்றுகைகள், உரையாடல்கள், பிறந்தநாள் நிகழ்வுகள் போன்ற அனைத்தையும் நான் தற்பொழுது தவற விடுகின்றேன்". அவரது தாயாரான சிரேஷ்ட கண்டிய நடன நிபுணரும், நட்டுவாங்க கலைஞரும் குருவுமான வஜிர சித்திரசேனா கடந்த வருடம் இந்தியாவின் பத்மஸ்ரீ விருதுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆனால் அந்த கௌரவத்தை பெற்றுக்கொள்வதற்காக பெருநோய் காரணமாக அவரால் புதுடில்லிக்கு பயணிக்க முடியவில்லை.

கொழும்பை தளமாகக் கொண்டியங்கும் பரதநாட்டிய கலைஞரும் ஆசிரியையுமான திவ்யா சுஜேன் ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டிற்கு செல்வதற்கான பல்வேறு காரணங்களை கொண்டிருந்தார். தனது அபிநயக்ஷேத்ரா நடனப் பள்ளியின் தயாரிப்புக்களை அவர் அங்கு கொண்டு செல்லவில்லையாயின் இசைத் துறை சார்ந்த பணிகளுக்காக அங்கு செல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். "லால்குடி ஜி.ஜே.ஆர்.கிருஷ்ணன் மற்றும் ராஜ்குமார் பாரதி போன்ற இசையமைப்பாளர்களுடன் இணைந்து நமது தயாரிப்புக்காக பணியாற்றுவது நமக்கு கிடைக்கும் பாரிய கௌரவம் ஆகும். இந்த ஒலிப்பதிவுகளுக்காக நான் இரு வாரங்கள் அங்கு தங்கியிருக்கும் நிலை ஏற்படும்" என்று அவர் கூறுகிறார்.

அரங்கேற்றங்களை நிகழ்த்தும் தனது மாணவர்களுக்குரிய ஆடைகளை பெற்றுக் கொள்வதற்கும், புகைப்படங்களை எடுத்துக் கொள்வதற்காகவும் திவ்யா அவர்களை சென்னைக்கு அழைத்துச் செல்கின்றார். ஆனாலும் இந்த நடனக் கலைஞர் பிரபலமான பரதநாட்டிய நிபுணரான தனது குரு சி.வி. சந்திர சேகர் அவர்களை சந்திப்பதை அதிகம் தவறவிடுவதாக உணர்கின்றார். கடந்த மேயில் அவரது 85 ஆவது பிறந்த தினத்தில் அவரை சந்திப்பதற்கு திவ்யா தயாராக இருந்தபோதும் பயணங்கள் முடக்கப்பட்டிருந்தன. இருந்தாலும்



அந்த சந்தர்ப்பத்தினை குறிப்பிடும் முகமாக இலங்கை பரத நாட்டிய கலைஞர்களின் உலகளாவிய அமைப்பினை இலங்கையில் ஆரம்பித்து 1983 தமிழர்களுக்கு எதிரான கலவரம் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிய ஆசிரியர்கள் கலைஞர்கள் போன்ற அனைவரையும் ஒரே தளத்தில் ஒன்றுகூடும்வகையில் அந்த அமைப்பினை அவர் உருவாக்கியுள்ளார். பிரியதர்ஷினி கோவிந்த் போன்ற இந்திய கலைஞர்களுடன் இணைந்து அவர் இணைய ரீதியிலான விரிவுரைகளை நடத்தியிருந்ததுடன் இந்திய கலைஞர்களுடன் இணைந்து மெய்நிகர் மார்க்கங்களூடாக நட்டுவாங்கம் கற்கைநெறியினை ஆரம்பித்திருந்தார். " நேரடியாக சந்திக்கும் வரையில் இலங்கை - இந்திய கலைஞர்கள் இடையிலான உறவானது இணையம் ஊடாக தொடர வேண்டும் என நான் நம்புகிறேன்" என்று அவர் கூறுகிறார்.

**இலக்கிய சந்திப்புக்கள்**

"இவ்வாறான ஒரு முடக்கத்தினை எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை" என்று இலங்கையில் கம்பன் கழகத்தை ஆரம்பித்து நடத்திவரும் பிரபலமான தமிழ் புலமையாளர் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் கூறுகிறார். சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்காகவோ அல்லது இலக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதற்காகவோ தொடர்ச்சியாகவும் சில தடவைகளில் மாதம் ஒன்றில் ஐந்து தடவைகள் கூட இந்தியாவுக்கான பயணத்தினை மேற்கொண்டி



ருக்கும் ஜெயராஜ் ஒவ்வொரு வருடமும் இந்திய கலைஞர்களையும் புலமையாளர்களையும் இலங்கைக்கு அழைத்து வரும் முன்னணி சக்தியாக விளங்குகிறார். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கம்பன் கழகத்தினால் கட்டணமின்றி நடத்தப்பட்டுவரும் கலை விழாக்கள் பெருமளவான ரசிகர் கூட்டத்தினை கொண்டுள்ளது. இறுதியாக நடைபெற்றிருந்த 2020 கலைவிழாவில் பின்னணி பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

"1990களின் நடுப்பகுதியிலிருந்து நாம் இந்திய கலைஞர்களை அழைத்து வருகிறோம். அத்துடன் இங்குள்ள ரசிகர்களுடன் பல்லாண்டு காலமாக அவர்கள் ஒரு விசேட பிணைப்பினை உருவாக்கியுள்ளார்கள். நமது இல்லங்களில் தங்கி, எம்முடன் உணவருந்தி எம்முடன் நேரத்தைச் செலவிட்டு... இவ்வாறாக மிகவும் வலுவாக காலா காலமாக கட்டியெழுப்பப்பட்ட உறவுகள் மட்டுமே தற்போது முன்னொரு போதும் இல்லாதவாறு ஏற்பட்டிருக்கும் பெருநோய் சூழலை தைரியப்படுத்துபவையாக அமைகின்றன" என்று ஜெயராஜ் கூறுகிறார்.

அவுஸ்திரேலியாவில் இருக்கும் தனது குழுவுடன் இணைந்து கொழும்பு கம்பன் கழகம் மெய்நிகர் இலக்கிய சந்திப்பு ஒன்றினை நடத்தியதுடன் இவ்விடயம் தொடர்பான வீடியோக்களை தனது இணையதளத்தில் பகிர ஆரம்பித்துள்ளது. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மிகவும் விரும்பப்படும் அதே நேரம் கிரமமானவருகையினை கொண்டிருக்கும் இசைக்கலைஞரான பாம்பே ஜெயஸ்ரீஅவர்களுடன் பக்திப் பாசுரங்கள் தொகுதி ஒன்றுக்காக ஜெயராஜ் அவர்கள் தொலைவிலிருந்தவாறு பணியாற்றி வருகிறார்.

கலைஞர்களும் ரசிகர்களும் "உறவாட ஏங்குகிறார்கள்" என்று கூறும் ஜெயராஜ் நேரடியான இசை விழாக்கள் இவ்வருடம் நடைபெறுவதற்கான சாத்தியங்களையும் எதிர்பார்க்கின்றார்.

**மீரா ஸ்ரீநிவாசன்**

நன்றி-தி ஹிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியசேவியர் என்ற மகத்தான மானிட ஆளுமை மறைந்தது!



**யோ.யோண்சன் ராஜ்குமார்**

ஈழத்தின் கலை இலக்கியப் புலத்திலும், அர்ப்பணிப்புள்ள சமூகப்பணிகளிலும், கலை இலக்கியப் பாரம்பரியத்திலும் தனது பணிகளினாலும் கலை ஆளுமையினாலும் முதன்மைப்படுத்தப்பட்ட அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள். தனது 81ஆவது வயதில் இவ்வுலகை நீத்தார்.

ஏறத்தாழ கடந்த ஆறு தசாப்தகாலமாக கலை இலக்கியத்துறைகளோடும் சமுகப்பணிகளோடும் தன்னைக் கரைத்துக் கொண்டவர், இனம் மதம் மொழிகடந்து “மனிதம்“ என்ற உயரிய சிந்தைனையை வாழ்வாக்கிக் கொண்டவர், திருமறைக் கலாமன்றம் என்ற கலாசார நிறுவனத்தினை உருவாக்கி அதனுடாக இறுதிவரையும், நாடுதழுவியும் நாடுகடந்தும் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அம்மன்றத்தினூடக உருவாக்கம் பெற்ற பல படைப்பாளிகள் இன்று உலகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்திலே யுத்தம் கொழுந்துவிட்டெரிந்த காலத்தில் தனித்து நின்று கலைசெய்து கலையினூடாக தமிழ் இனத்தின் துயரங்களை உலகறிய செய்ததுடன் துயருற்ற மக்களுக்கான கலைவழி ஆற்றுப்படுத்தலையும் செய்தவர். இத்கைய சிறப்புக்குரிய கலைக்குருவாகிய மரிசேவியர்அடிகள் கடந்த முதலாம் திகதி இறைவனடி சேர்ந்தார். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அவரது இறுதிச்சடங்குகள் நடைபெறுகின்றன. இத்தகயை சூழலில் அவர் பற்றிய இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

**தொடக்கமும் தூண்டுதலும்**

மரியசேவியர் அடிகள், 03.12.1939 அன்று இளவாலையில் பிறந்தார். கலைப் பூமியாகிய இளவாலையில் பாலப்பருவதில் இருந்தே கூத்துக்களில் நடித்தது மட்டுமன்றி கோவில் பாடகர் குழாமில் பாடல்களைப் பாடுதல், பாடசாலையில் நாடகங்கள் நடித்தல் என தனது கலை ஆர்வத்தினை வளர்த்துக்கொண்டவர், சிறிய குருமடத்தில் இருந்தபோது அங்கு பியானோ இசைக்கவும், பாடுகர் குழுவுக்கு தலைமை தாங்கவும் கலையோடு வளர்ந்தார். அம்பிற்றியா பெரிய குருமடத்தில் அமரர்களான அருட்திரு மைக்கேல் றொட்றிக்கோ, அருட்திரு இராயப்பு போன்ற அருட் தந்தையர்களாலும் ஊக்கமளிக்கப்பட்டார். தொடர்ந்து உரோமாபுரியில் இறையியல் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற காலத்தில் பலமொழி பேசுவோரோடும் பலநாட்டுக் கலாசார உறவுகளுடன் கற்று 22 வயதில் குறைந்த வயதில் பாப்பரசரின் விசேட அனுமதியுடன் குருப்பட்டம் பெற்று விசேட அனுபவங்களோடு இங்கு குருவாக வந்து பணியேற்றார். கலையை தனது பணிகளுக்கான ஆயுதமாக பயன்படுத்தத் தொடங்கினார். முன்நாள் ஆயர்களான எமிலியானுஸ்பிள்ளை, தியோகுப்பிள்ளை ஆண்டகைகளின் ஆதரவும் தட்டிக் கொடுத்தல்களும் அவரது பணிகளை விரிவடையச்செய்தன.இலங்கை வானொலியின் கத்தோலிக்க சேவைக்கு பொறுபாக பணியாற்றியவர் பல வானொலி நாடகங்களை எழுதினார்.

**திருமறைக் கலாமன்றத்தின் தாபகர்**

1963 ஆம் ஆண்டில் இருந்தே கலைச் செயற்பாடுகளை ஆற்றத் தொடங்கிய மரியசேவியர் அடிகள் திருமறைக்கலாமன்றம் என்னும் அமைப்பினை 1965 ஆண்டு ஆரம்பித்து இன்று வரைக்கும் அதன் இயக்குநராக இருந்துபணியாற்றிக்கொண்டிருப்பவர். ஆரம்பத்தில் தனியே திருப்பாடுகளின் காட்சிகளையும் நாடகங்களையும் மட்டும் நிகழ்த்தும் நிறுவனமாக உருவாக்கி 1988 ஆம் ஆண்டில் இருந்து இனமத மொழி கடந்தியங்கும் கலாசார மையமாக (Centre For PerForming Arts) பல்வேறுபட்ட பணிகளைகளையும் ஆற்றிவரும் நிறுவனமாக இதனை வளர்த்தெடுத்தார். மரபுவழிக் கலைகளான கூத்து, இசைநாடகம், கிராமியக்கலைகள் என்பவற்றினைப்பேணும் நடபடிக்கைகள், மரபுவழி, நவீன நாடகங்கள் என பல்வகை நாடகங்களையும் மேடையேற்றுதல், இளையோரை நுண்கலைகளில் பயிற்றுவிப்பதற்கான கலைத்தூது அழகியல் கல்லூரி, நாடகப்பயிலகம்,சிறுவர்கலைக்கூடம், ஓவியக்கலை வட்டம் என பல்வேறு பிரிவுகளை உருவாக்கி எதிர்காலத்தின் கலை ஆளுமைகளை உருவாக்கும் பணிகளை ஆற்றிவருகின்றார். மன்றத்தில் உருவாகிய பல இளைஞர்கள் இன்று உலகம் முழுவதும் பல்வேறு இடங்களிலும் சாதனைபுரிந்துவருவது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் வேறு எந்த நிறுவனமும் அரங்கேற்றாத அளவுக்கு 300க்கும் மேற்பட்ட நாடகங்களை திருமறைக் கலாமன்றம் அரங்கேற்றியுள்ளது. அதுமட்டுமன்றி தமிழ் விழா, இலக்கிய விழா, நாட்டுக்கூத்துவிழா, இசை நாடகவிழா, கிராமிய கலைவிழா, இசைவிழா நாடக விழா.. என பல்வேறு விழாக்களை காலத்துக்குகாலம் நிகழ்த்தி எமது பண்பாட்டின் பெறுமானங்கள் யுத்த காலத்திலும் அழிந்து போகாதவகையில் அவற்றிக்கு எழுச்சியை ஏற்படுத்தியுள்ளார். அதுமட்டுமன்றி இலங்கையில் 20 பிராந்திய மன்றங்களை அமைத்து இலங்கை முழுவதும் இப்பணியினை தொடர்ந்து ஆற்றிவருகின்றார். இன்று திருமறைக்கலாமன்றம் தமிழ்கலைகளின் மையமாக நின்று பணியாற்றிவருகின்றது.

**திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியம்**

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தினையொட்டிய கலை மரபாகிய திருப்பாடுகளின் நாடக மரபானது உடக்குப் பாஸ் என்னும் பொம்மை நாடக மரபில் இருந்து 1954 இல் முதன் முதலாக அருட்திரு லோங் அடிகளாரின் முயற்சியினால் மனிதர்கள் நடிக்கும் நாடகமரபாக ஆரம்பமாகிய முயற்சி.பின்னர் மொழிபெயர்ப்பு நாடகங்களாக வளரந்தது. அம்மரபினை மாற்றி தமிழில் முதன் முதலாக தமிழுக்குரிய வகையில் இதனை எழுதி மரிசேவியர் அடிகளே மேடையேற்றத் தொடங்கினார். அதனை படிப்படியாக வளர்த்து “பாஸ் என்றால் அது மரியசேவியரின் பாஸ்தான்“ என்று மக்கள் கூறுமளவுக்கு அம்மரபுக்கு முகவரி அமைத்ததுடன் பல்வேறு பரீட்சார்த்த நாடகங்களை உருவாக்கினார் கல்வாரியில் கடவுள்,அன்பில் மலர்ந் அமரகாவியம்,களங்கம், பலிக்களம், கடவுள் வடித்த கண்ணீர், சிலுவை உலா,கல்வாரிப்பரணி, கல்வாரிக்கலம்பகம், காவிய நாயகன், வேள்வித் திருமகன்... என 25 க்கு மேற்பட்ட பாடுகளின் நாடகங்களை எழுதினார். அத்துடன் நடிப்பு, காட்சிவிதானிப்பு, இசை,ஒலி,ஒளி என ஒவ்வொரு துறையிலும் கவனம் செலுத்தி இன்று உலகத்தரம் வாய்ந்த நாடகமரபாக இதனை வளர்த்தெடுத்திருப்பது மட்டுமன்றி இதனை தொடர்ந்து நிகழ்த்தத்தக்க கலைப் பரம்பரம்பரையையும் தோற்றிவித்துள்ளார். வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கானவர்கள் இதனைப் பார்வையிடுகின்றனர்.

**சமாதானத்துக்கான கலை முயற்சிகள்**

தொண்ணூறுகளில் யுத்தம் முனைப்புபெற்ற காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையை தென்பகுதியில் யாரும் பேசமுடியாத காலத்தில் “கலை என்ற தளத்தில் எல்லா மனிதர்களையும் சந்திக்கச் செய்யமுடியும்” என்ற கொள்கையுடன் சமாதானத்துக்கான பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டார். யுத்தத்தின் பயங்கரத்தினை வெளிப்படுத்தவும் சமாதானத்தின் அவசியத்தினை வலியுறுத்தவும் தலைநகரில் “வார்த்தைகளற்ற நாடகம்” (Wardless play) என்ற வகைமையை உருவாக்கி. பல நாடகங்களை மேடையேற்றினார். “புறம்”, “அசோகா”, “தர்ஷனா”, “கி.மு.200”... போன்ற அவரது நாடகங்கள் தலைநகரில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. “ஊமம்” முறைமையில் மரியசேவியர் அடிகளினால் பரீட்சார்த்தமாக உருவாக்கப்பட்ட அவ் வடிவம் எந்த மொழி பேசுபவராலும் புரிந்து கொள்ளக்கூடிய, இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதியவடிவமாக அமைந்தது. யுத்தத்திற்கு எதிரான கருத்து நிலையைக் கொண்ட அந் நாடகங்களில் தமிழ் சிங்களக் கலைஞர்கள் இணைந்து நடித்தனர். குறிப்பாக “தர்சனா” பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவின் குழுவினருடன் இணைந்து தயாரிக்கப்பட்டது. இத்தகைய முயற்சியின் தொடர்ச்சியாக இலங்கை முழுவதிலும் 20 பிராந்திய மன்றங்களை சிங்கள தமிழ் மக்களிடையே உருவாக்கி சமாதானத்துக்கான பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தார். பிரபல சிங்கள கலைஞர்களான எதிரிவீர சரச்சந்திரா, ஜெரோம் டி சில்வா, சோமலதா சுபசிங்க, மிராண்டா ஹேமலதா.. போன்ற பலரையும் சமாதான முயற்சிகளில் இணைத்ததுடன் வடக்கிலும் தெற்கிலும் கலைஞர்க ளின் சமாதான மாநாடுகளையும் ஏற்பாடு செய்திருந் தார். மனமே, சிங்கபாகு போன்ற நாடகங்களையும், கண்டிய நடனம் உட்பட தென்னிலங்கை கலைகளை கலாசார பரிவர்த்தனையாக வடக்கிலே கொண்டு சென்று மேடையேற்றியவர் இவரே. 2002 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தாபனத் தின் உலக சிறுவர் மாநாட்டில் இலங்கையில் குறிப்பாக வடபகுதிச் சிறுவர்களின் நிலையை வெளிப்படுத்தும் “யுத்தத்தின் தொட்டில்” (In Cradle of the War) என்ற வார்த்தைகளற்ற நாடகத்தினை நிகழ்த்தி உலகளவில் பாராட்டப் பெற்றதுடன் தமிழர்களின் பிரச்சனையை உலகறியச்செய்தார்.

இத்தகைய சமாதான முயற்சிகளுக்காகவே 2016 ஆம் ஆண்டு “சமாதானத்துக்கும் நல்லெண்ணத்திற்குமான மீயுர்விருதினை” இலங்கை ஜெனாதிபதி மைத்திரிபால சிறிசேனா இவருக்கு வழங்கி கௌரவித்தார்.

**வெளிநாட்டுக் கலைப்பயணங்கள்**

புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழுகின்ற எம்மவர்களை இணைத்து அங்கு கிளைகளை உருவாக்கியதுடன், திருமறைக்கலாமன்றத்தின் பணிகளை அங்கும் ஆற்றிவருவதுடன் எம்மவர்களை சந்தித்து மண்ணின் உறவுகளையும் கலாசார வேர்களையும் புத்துயிர்ப்பு செய்யும் வகையிலான பல்வேறு கலாசாரக் கலைப் பயணங்களை அசாத்திமான காலச்சூழல்களிலெல்லாம் பகீரதபிரயத்தனங்களின் மத்தியில் மேற்கொண்டு இங்கிருந்த எமது கலைஞர்களுக்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தி இதுவரை 19 தடவைகள் வெளிநாட்டுக் கலைப்பயணங்களை மேற்கொண்டார். இவரது கலைத்தூதுப்பயணங்களை மதித்து யேர்மன் ஆன்மீகப் பணியகம் இவருக்கு 1998ஆம் ஆண்டு “கலைத்தூது” என்ற பட்டத்தினை வழங்கி கௌரவித்தது.

**அரங்கவியலாளன்**

ஈழத்தின் முக்கிய நாடகவியலாளர்களிலொருவராக விளங்குகின்ற மரியசேவியர் அடிகள், நாடக ஆசிரியராக, நெறியாளராக, நாடகத் தயாரிப்பாளராக, அரங்கியல் ஆய்வாளனாக பல்வேறுதளங்களிலும் தடம்பதித்துள்ளார். குறிப்பாக பல்வேறு திருப்பாடுகளின் நாடகங்கள், விவிலிய நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், இலக்கிய நாடகங்கள் நடனநாடகங்கள், என பலவற்றையும் எழுதியுள்ளார். ஐம்பெருங்காப்பியங்களையும் நாடகமாக்கியது இவரின் முக்கியமான பணியாகும். ஈழத்து நாடக வரலாற்றினை இவரைவிடுத்து விடுத்து எழுத முடியாது. என்ற அளவில் இவரது நாடகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதுமட்டமன்றி ஈழத்தின் சிறந்த நெறியாளர்களிலொருவராக விளங்கும் இவர் தனக்கென சிறப்பான நெறியாக்கத்திறனைக் கொண்டிருந்தார். நேர்த்திமிக்க பல அரங்கத் தயாரிப்புக்கள் சர்வதேச தரத்தில் இவரால் படைக்கப்பட்டன. அவரைப் பின்பற்றிய மாணவ பரம்பரையொன்று திருமறைக் கலாமன்றத்தில் தொடர்ந்து வருவது மட்டுமன்றி இன்று உலகளாவிய நிலையில் அவர்கள் நாடகங்களைப் படைத்துவருவது குறிப்பிடத்தக்கது. மற்றும் இவர் எழுதிய “கலைமுகம்”, “அரங்கவலைகள்” போன்ற அரங்கியல் ஆய்வு நூல்கள் முக்கி யத்துவமுடையவை. உலக அளவில் பலநாடகங்ளைப் பார்வையிட்டவராகவும் உலகப் புகழ் பெற்ற பல அரங்கவியலாளர்களைச் சந்தித்து உரையாடியவராகவும் காணப்பட்டார்.

**கல்விப்புலம்**

சிறிய வயதில் இருந்தே கல்வியில் சிறந்துவிளங்கிய இவர் இரட்டை வகுப்பேற்றங்களினால் குறைந்த வயதிலேயே தனது குருத்துவக்கல்வியை முடித்து, 22வயதில் பாப்பரசரின் விசேட அனுமதியுடன் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டது மட்டுமன்றி, உரோமைப் பல்கலைக்கழகத்தில் இறையியலில் கலைமாணி, முதுதத்துவமாணி கற்கைகளை தனது இளவயதிலேயே நிறைவு செய்தார் பின்னர், தமிழகத்தில் மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் தமிழை சிறப்புபாடமாக பயின்று “வித்துவான் புலவர்” பட்டங்களைப் பெற்றார், தொடர்ந்து லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில், முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றார், A Catholic-u;indu Encounter என்ற பெயரில் கலாநிதிப் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வு மிகமுக்கியத்துவமுடைதாக விளங்குகின்றது. பின்னர் ஜேர்மனியிலுள்ள பசாவு பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்துறையில் மற்றொரு கலாநிதிப் பட்டத்தை ஜேர்மன் மொழியிலே மேற்கொண்டார். இவைமட்டுமன்றி தமிழ் ஆங்கில மொழிகளில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் மொழியியல், இறையியல், தத்துவவியல், அரங்கியல், என பல்வேறு துறைகளிலும் எழுதியுள்ளார். அதுமட்டுமன்றி ஆங்கிலம், சிங்களம், லத்தீன், இத்தாலியம், கிரேக்கம், எபிரேயம், ஜேர்மன், சமஸ்கிருதம்,போன்ற மொழிகளை அறிந்தவராகவும், சில மொழிகளில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவராகவும் விளங்குகினார். இவரது பணிகளையும் ஆளுமையையம் மதித்து யாழ்ப்பாண பல்பலகலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதி பட்டத்தினையும் வழங்கி கௌரவித்தது.

**வெளியீடுகளும் கௌரவமும்**

நாடகம்பற்றி தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளார். “கலைமுகம்”

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியசேவியர்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற இவரது நூல் அரங்கத் தயாரிப்பு அனுபவங்களை வெளிப்படுத்தும் நூலாகும். அவ்வாறே "அரங்கவலை கள்" என்ற இவரது நூல் நவவேட்கை வாத நவீன அரங்கியலாளர்கள் பற்றிய நூலாகும், இதனைவிட "நகையகம்" இவரது மொழி பெயர்ப்பு நாடக நூல். 'மறை பொருள் நாடகங்கள்' இவரது 10 நாடகங்களின் தொகுதி இவை தவிரவும் பலிக்களம், களங்கம், கன்னிபெற்ற கடவுள், கல்வாரியாகம், சிலுவை உலா, கல்வாரிக் கலம்பகம், காவிய நாயகன், வேள்வித் திருமகன்.. என 12 நாடக நூல்கள் வெளி வந்துள்ளன. அவைதவிரவும் 'The Life and times of orazio betta -chini', 'A Catholic - Hindu Encou -nter', 'Jaffna-land of the Lurid', 'Siddhanta Traditions, Philosopher - sages,' போன்ற ஆங்கில மொழியிலே அமைந்த நூல் களையும் 'சுவைத்தேன்', 'வாகைச்சுடர்', 'காலத்தின் தடங்கள்' என பல் வேறு நூல் களையும் எழுதியுள்ளார்.

இவற்றைவிட திருமறைக் கலா மன்றத்தினூடாக 'கலைமுகம்' என்னும் கலை இலக்கிய இத ழினை 1990 ஆம் ஆண்டுமுதல் பிரதான ஆசிரியராக இருந்து நடத்தி வருகின்றார் , இதுதவிர வும் Journal of Siddhanta Studies என்ற சைவ சித் தாந்தத்துக்கான பருவ ஆய்விதழையும், நாட கமும் அரங்கியலுக்கென 'ஆற்றுகை' என்ற சஞ்சிகையை யும் வெளியிட்டு வந்துள்ளார். இதுவரை திருமறைக்கலாமன்ற தினால் 12 நாட்டுக்கூத்து நூல் கள் பதிப்பு செய்யப்பட்டுள் ளன. 27 வேதாகம நாடகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. சிறு கதை, நாவல். கவிதைத்தொகுதி கள், காவியங்கள் எனபலவும் பதிக்கப்பட்டுள்ளன. பல ஒலி நாடாக்கள் இறு வட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ் வாறான பல்தரப் பட்டபணி களுக்கும் ஆளுமைக்கும் காரணமாக இருந்தவர் நீ. மரியசேவியர் அடிகளாவார்.

இவரது கலைப்பணியை பலரும் மதித்து கௌரவித்துள் ளனர். யாழ் மாநகர சபை உயர் விருதான "யாழ் விருதினை" 2013 இல் இவருக்கு வழங்கி யது, இலங்கைக் கம்பன் கழகம் இவருக்கு 2017 ஆம் ஆண்டுக் கான "கம்பகலாநிதி இராதா கிருணன் விருதினை" வழங்கி யது. டான் தொலைக்காட்சிக் குழுமம் 2019ஆம் ஆண்டுக் கான 'சாதனைத்தமிழன்' விருதினை வழங்கியது. இறுதி யாக கடந்த வருடம் இலங்கை கலாசார அமைச்சு நாடகத் துறைக்கான உயர் விருதான 'நாடக கீர்த்தி' விருதினை வழங்கி அவரது அரங்கப் பணியை கௌரவித்துள்ளது. கலையையே தனது தவமாகக் கொண்டு தனது வாழ்நாள் முழு வதையும் கலைப் பணிக்கா கவும் சமூகப் பணிக்காகவும் கரைத்த அடிகளார் விருதுக ளால் கொளரவிக்கப்பட்டதனை விட அவரால் இவ்விருது கள் கௌரவம் பெற்றன என்பதே உண்மையாகும்.

மேன்மைமிக்க பணிகளை ஆற்றி அமரத்துவமடைந்த மரிய சேவியர் அடிகளின் எண்ணங் களை வாழ்வதும் அவர் தொடக் கிய பணிகளைத் தொடர்வ துமே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகவும் இருக்கும். •

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த பல உண்மைகளை மறைக்க முயற்சி

## நீதி கிடைக்கும் வரை மௌனிக்கப்போவதில்லை - சம்பிக்க



கொழும்பு,ஏப்.04

**2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோருவதில் நாம் ஒருபோதும் மௌனிக்கப் போவதில்லை. தகவல்கள் கிடைத் திருந்தும் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது மாத்திரமின்றி, 2010 ஆம் ஆண்டு வரை சஹ் ரான் உள்ளிட்ட தௌஹீத் ஜமாஅத் அமைப்பினருக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் ஊதியம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் என்பவையும் எதிர்வரும் அரசாங்கம் மூலமாக வெளிப்படுத்தப்பட வேண் டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலு வலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர் பானஜனாதிபதிவிசாரணைஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றது.

எனினும் அதில் பல முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த விடயங்கள் தொடர்பில்அவதானம்செலுத்தப்பட வேண்டும்.

ஐ.எஸ்.ஐ.எஸ் உள்ளிட்ட எந்தவொரு தீவிர வாத அமைப்புக்களின் தலைவர்கள் அவர் களின் உயிரை மாய்த்துக்கொள்ளவில்லை. அவ்வாறிருக்கையில் சஹ்ரான் எவ்வாறு பிரதான சூத்திரதாரியாக இருப்பார்?

எனவே, கடந்த 2010 ஆம் ஆண்டு வரை சஹ்ரான் உள்ளிட்ட தௌஹீத் ஜமாஅத் அமைப்பினருக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஊதியம் வழங்கியமை, 2007 இல் கிழக்கில் காத்தான்குடி பிரதேசத்தில் குறிப் பிட்ட சிலருக்கு வழங்கப்பட்ட ரி -56 ரக துப்பாக்கிகள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் மீளப் பெறப்படாமை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலன்று தாஜ் சமுத்திரா ஹோட் டலில் தாக்குதல்களை மேற்கொள்ள விருந்த தாக்குதல்தாரி தெஹிவளைக்குச் சென்று குண்டை வெடிக்கச்செய்ய முன்னர்இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியொருவரை சந்தித்ததாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் சாட்சியம் வழங்கியமை உள்ளிட்ட விடயங் கள் தொடர்பிலும்உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் பல விடயங் களை மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள் ளப்படுகின்றன.

எனவே, எதிர்காலத்தில் தெரிவு செய்யப் படும் அரசாங்கமேனும் இதன் உண்மையான பின்னணியைக் கண்டறிய வேண்டும். தாக்குதல்கள் தொடர்பில் தகவல் கள் கிடைத் திருந்தும் அதனைத்தடுக்கத்தவறிய வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மாத்திரமின்றி, அனைத்து உண்மைகளும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கான நியாயத்தை கோரு வதில் நாம் ஒருபோதும் மௌனிக்கமாட் டோம்-என் றார். (எ)

# சமூக வலைத்தளங்கள் மூலம் அரசு மீது போலிக்குற்றச்சாட்டு

## பிரேம்நாத் எம்.பி. கவலை



கொழும்பு, ஏப்.04

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையிலான அரசாங் கத்தை பலவீனப்படுத் தும் வகையில் பொய்க் குற்றச் சாட்டுக்கள் பல முன்வைக்கப் பட்டுள்ளன.

எனினும், அரசாங்கத்தின் செயல்பாடுகளிலும் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின் றன. அவற்றை நிவர்த்தி செய்து கொண்டு மக்களின் அபிலா ஷைக்கு ஏற்ப செயல்படுதல் அவ சியமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்த தெரி வித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

பொய்யான விடயங்களை உண்மையைப் போன்று வடிவ மைக்கும் தன்மை சமூக வலைத்தளங்களுக்கு உண்டு. தற்போது சமூக வலைத் தளங்களில் வெளியாகும் செய்திகள் பொய் யானதாக காணப்பட்டாலும் ஒரு சிலர் அதனை விரும்பி ஆராய்கிறார்கள். உண்மையைத் தோற் கடிக்கும் வலிமை சமூக வலைத்தளங்களில் வெளியாகும் போலியான செய்திகளுக்கு உண்டு.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங் கத்தை பலவீனப்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங் களில் பல போலிச் செய்திகள் வெளியாகின்றன. உணர்வுபூர்வ மாக தாக்கம் ஏற் படுத்தும் போலிச்செய்திகளை மக்கள் விரை வாக ஏற்றுக் கொள்கி றார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்த லில் தோல்வியடைவதற்கு பிரதான காரணிகளில் ஒன்றாக சமூக வலைத்தளங்களில் வெளியான செய்திகளை குறிப்பிட வேண்டும். பல் வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் நல்லாட்சி அரசாங்கம் தோற்றம் பெற்றது.

தற்போதைய அரசாங்கத்திலும் ஒரு சில குறைபாடுகள் காணப்படு கின்றன. குறைபாடுகளை நாட்டு மக்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அவற்றை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். மக்களின் வெறுப்புக்கு மத்தியில் அரசாங்கம் செயல்பட்டால் எவ்வித பயனும் தோற்றம் பெறாது. ஆகவே தவறுகள் திருத்திக் கொள்ளப்படுவது கட்டா யமாகும் - என்றார். (எ)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 - 02 - 1949 |  | 02 - 04 - 2021 |

## திரு. ஆறுமுகம் தெய்வேந்திரம்

யாழ்.கொக்குவிலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தெய்வேந்திரம் அவர்கள் 02.04.2021வெள்ளிக்கிழமை அன்று காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இராசாம்மாவின் 2 ஆவது மகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மனோகரன், கந்தசாமி, சிவகாமி, கனடாவில் வதிபவரான சிவலிங்கம் ஆகியோரின் சகோதரரும், மதிவதனி, நந்தினி, உதயகுமார் (உதயன் கேபிள் விஷன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கேதீஸ்வரநாதன், ரமேஷ், வனிதா ஆகியோரின் மாமனாரும், பரன், கேதாஜினி, பிரவீனா, ஜனார்த்தன், டினேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 04.04.2021 நண்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**

**உதயன் (மகன்) 0777651661, 0777653960**

**கொக்குவில், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை: கனடா கன்சர்வேட்டிவ் கட்சி கண்டனம்!

ஒட்டாவா, ஏப்ரல் 04

**இலங்கையில் மனித உரிமைகளிற்காக குரல்கொடுக்கும் அமைதி வழி செயற்படும் கனடாவை சேர்ந்த தமிழ் அமைப்புகள் மீது விதிக்கப்பட்ட தடை குறித்து கன்சவேர்ட்டிவ் கட்சியினர் கவலையடைந்துள்ளனர் என தெரிவித்துள்ள அக்கட்சி, இந்த தடை நியாய பூர்வமான விமர்சனங்களிற்கான உரிய பதில் இல்லை என்பதை கனடா அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

கனடிய அரசாங்கம் இலங்கையில் இடம்பெற்ற இனப்படு கொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கன்சவேர்ட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கனடாவின் நிழல்வெளிவிவகார அமைச்சர் மற்றும் மனித உரிமைக்கான சர்வதேச அமைச்சரும் இணைந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட அதிகாரிகளிற்கு எதிராக கனடா அரசாங்கம் தடைகளை விதிக்கவேண்டும், இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலிற்கு முன்னதாக வெளிவிவகார குழுவும் பொதுச்சபையும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணையை ஐ.நா. முன்னெடுக்கவேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தன என தெரிவித்துள்ள அவர்கள், ஆனால் தற்போதைய அரசாங்கம் அதற்காக குரல் கொடுத்துள்ளமைக்கான எந்த அடையாளமும் இல்லை என தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான முக்கிய அமைப்புகளின் சுதந்திரம் அற்றுப்போவது மற்றும் அரசியல் தலையீடு குறித்தும் அவர்கள் கரிசனை வெளியிட்டுள்ளனர்.

தமிழர்கள் முஸ்லீம்கள் ஒதுக்கப்படுவது அதிகரித்துள்ளமை யுத்தத்தின் போது கொல்லப்பட்டவர்களை நினைவுகூறுவதற்கான கட்டுப்பாடுகள் குறித்தும் அவர்கள் கரிசனை வெளியிட்டுள்ளனர். இலங்கை அரசாங்கம் சமீபத்தில் புலம்பெயர் தமிழர் அமைப்புகளை தடை செய்தமை குறித்தும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் மனித உரிமைகளிற்காக குரல்கொடுக்கும் அமைதி வழி செயற்படும் கனடாவை சேர்ந்த தமிழ் அமைப்புகள் மீது விதிக்கப்பட்ட தடை குறித்து கன்சவேர்ட்டிவ்கள் கரிசனை அடைந்துள்ளனர் என தெரிவித்துள்ள அவர்கள், இந்த தடை நியாயபூர்வமான விமர்சனங்களிற்கான உரிய பதில் இல்லை என்பதை கனடா அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மன்னார் செபஸ்தியார் ஆலயத்தில் நாளை வரை ஆயரின் பூதவுடல்!

மன்னார், ஏப். 04

மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக மன்னார் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுச் சனிக்கிழமை ஆயிரக்கணக்கான மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் சென்று அஞ்சலி செலுத்தினர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து பேரணியாக மன்னார் ஆயர் இல்லத்துக்கு எடுத்து வரப்பட்ட ஆண்டகையின் பூதவுடலுக்கு பிற்பகல் 2.45 மணி முதல் மக்கள் சென்று இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இன்று பிற்பகல் 3 மணியளவில் ஆயரின் பூதவுடல் மன்னார் ஆயர் இல்லத்திலிருந்து பவனியாக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்கு ஞாயிற்றுக்கிழமை மாலை தொடக்கம் திங்கட்கிழமை மதியம் 2 மணிவரை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து திங்கள் கிழமை மாலை 3 மணியளவில் பேராலயத்தில் இறுதி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இலங்கையின் அனைத்து ஆயர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள். அதனைத் தொடர்ந்து பூதவுடல் பேராலயத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

சிங்கராஜ வனத்தைப் பாதுகாப்பதற்காக

## கொழும்பு ஐ.நா. அலுவலகத்தில் முறைப்பாடு செய்ய ரணில் திட்டம்

கொழும்பு, ஏப்ரல் 04

அரசாங்கத்தின் வன அழிப்பிற்கு எதிராக கண்டனத்தை தெரிவிக்கும் வகையிலும் சிங்கராஜ வனம் உள்ளிட்ட தேசிய வன வளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் - சிங்கள புத்தாண்டில் பச்சை நிற ஆடையணிய வேண்டும் என கேட்டுக்கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உலக மரபுரிமையான சிங்கராஜ வனத்திற்கு தற்போது ஏற்பட்டுள்ள அழிவு குறித்து செவ்வாய்க்கிழமை கொழும்பு ஐ.நா அலுவலகத்தில் முறைப்பாடளிப்பதோடு நீதிமன்ற ஊடக நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:



“சிங்கராஜ வன அழிப்பிற்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை கட்சி தலைமையகமான சிறிகொத்தாவிற்கு முன்பதாக அரசாங்கத்தின் வன அழிப்பிற்கு எதிராக ஓவிய கண்காட்சியும் கண்டன ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்படும்.

1988 ஆம் ஆண்டில் சட்டப்பூர்வமாக தேசிய மரபுரிமையாக சிங்கராஜ வனம் அங்கிகரிக்கப்பட்டது. அவ்வாறானதொரு சிறப்புரிமை மிக்க இந்த வனத்தை அழிப்பதற்கு இடமளிக்க கூடாது. அது மாத்திரமன்றி யுனொஸ்கோவும் உலக மரபுரிமையாக அங்கரித்துள்ளது. எனவே அதனை பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை ஏனைய தரப்புகளையும் ஒன்றிணைத்து முன்னெடுக்க வேண்டும்.

ஐ.நா உட்பட தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு சிங்கரான வன அழிப்பு குறித்து அறிவிப்போம்.” என குறிப்பிட்டார்.

**வேலையாள் தேவை**
போட்டோ கொப்பி & Phone Reload
கடைக்கு பெண் காசாளர் தேவை.
தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள்
விரும்பத்தக்கது. (சுழிபுரம்
விக்ரோறியா கல்லூரியின் முன்)
**077 875 7860**



## தமிழ்த் தேசிய துக்க தினத்துக்கு முஸ்லிம்களும் ஆதரவளியுங்கள்

### ரிஷாட் பதியுதீன் கோரிக்கை

மன்னார், ஏப்.04

தமிழ்த் தேசிய துக்க தினத்துக்கு முஸ்லிம் சமூகமும் தமது வர்த்தக நிலையங்களை மூடி பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாளை திங்கள்கிழமை மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயரின் இறுதி நல்லடக்கம் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினத்தை மாவட்டத்திலுள்ள மக்கள் மரியாதையின் நிமித்தம் தமிழ் - முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களை மூடி எமது துயரத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எனவே முஸ்லிம் சமூகமும் தமது வர்த்தக நிலையங்களை மூடி பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

(எ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

காலை
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX



11.30 மணி : தடை அதை உடை- தற்காப்புக்கலை
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
பகல்
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : HELLO கோடம்பாக்கம்
7.00 மணி : SPOT LIGHT - சட்டத்தரணி
ந.காண்டீபன்
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்



10.00 மணி: பதிவு

**DAN COMEDY HD**

காலை
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
பகல்
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
இரவு
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

காலை
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
பகல்
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
(நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
இரவு
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**கல்வி tv CHANNEL-1**

காலை
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
பகல்
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்
இரவு
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

காலை
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் சித்தன்கேணி நாககன்னி அம்மன் ஆலய திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
பகல்
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
இரவு
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் சித்தன்கேணி நாககன்னி அம்மன் ஆலய திருவிழா

**CHANNEL HOLY MARY**

காலை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
பகல்
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**Pirai Television**

காலை
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
பகல்
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
இரவு
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org